Registered as Newspaper at the G. P. O. Under No: Q. B. 8935/78

# மனிதன்

மனிதன்
அஞ்சல் பெட்டி
எண் 81
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-00

ஆத்மா 2 | இராகம் 10 | எப்பிரல்—மே 1979 | பக்கங்கள் 16

# யாழ் நகரில் மேதினம்

யாழ் நகரில் மூன்று பிரிவுகளாக மேதின விழா நிகழ்ந்தது.

1. கூட்டணி தலைமையில் இளைஞர் பேரவை மகளிர் பேரவை மொழிவழித் தொழிற்சங்கங்கள் என்பன இணைந்த பிரிவு.
2. இலங்கை சமசமாஜக் கட்சி (இடது) — வாசுதேவ நாணயக்கார அணி, இலங்கைக் கம்யூனிஸ் கட்சி, சண்முகதாசன் அணி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன இணைந்த பிரிவு.
3. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி - செந்தில் தலைமையில் வேறு தொழிற் சங்கங்களும் இணைந்த பிரிவு என்பன ஆகும்,

இம் மூன்று பிரிவுகளும் ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நிகழ்த்தின. கூட்டணியின் தலைமையிலான ஊர்வலம் குரங்கு மனிதனின் அசிங்கமான நிர்வாண ஆட்டத்துடன் ஆரம்பமானது.

முதலாவதாகக் குறிப்பிட்டுள்ள கூட்டம் யாழ் கோட்டை மைதானத்திலும் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டம் யாழ் திறந்த வெளி அரங்கிலும், மூன்றுவது பிரிவின் கூட்டம் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையிலும், நிகழ்ந்தன.

கூட்டணித் தலைமையிலான பிரிவின் கூட்டத்திலேயே பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர். ஆனால் ஊர்வலத்தைப் பொறுத்த வரையில் இரண்டாவது அணியே அதிக மக்கள் தொகையைக் கொண்டதாகக் காணப்பட்டது, மூன்றுவது அணியின் ஊர்வலமும் கூட்டமும், மிகச் சிறிதளவாகவே இருந்தன. கூட்டணித் தலைமையிலான ஊர்வலத்தில் ஓர் ஒழுங்குக் கட்டுப்பாடும் நிலவவில்லை. அது பார்வைக்கு குதம்பலாகவே காணப்பட்டது. ஆனால் 2ம், 3ம் அணிகளின் ஊர்வலங்கள் மிகச் சீர்மையாகவும் ஒழுங்காகவும் இருந்தன. இவை இரண்டும் ஓர் உணர்வு பூர்வமான ஊர்வலமாகவும் காட்சி அளித்தன. கூட்டணித் தலைமையிலான ஊர்வலச் சுலோகங்கள் திட்டமிட்டு அமைக்கப்படவும் இல்லை; திட்டமிட்டுச் சுலோகிக்கப்படவும் இல்லை. மற்றய இரண்டு அணிகளும் திட்டமிட்டு சுலோகங்களை சுலோகித்தன. இரண்டாவது அணியில் பல்வேறு கட்சிகள் கலந்து கொண்ட இடத்திலும் அவை தத்தம் கட்சிகளுக்குரிய தனித்துவத்தைச் சுலோகங்கள் மூலம் காட்டின.

## உள்ளே

★ விடுதலைப் பாதையில் கூட்டணி
★ தமிழர் தலைமை
★ எரித்திரிய விடுதலைப்போர்
★ விஞ்ஞான சோஷலிசம்
★ தமிழ் ஈழத்தில் அடக்குமுறை
★ இதயம்

கூட்டணித் தலைமையிலான ஊர்வலச் சுலோகத்தில் தமிழ் ஈழ மீட்புக்கோசமே மேல் ஓங்கி நின்றது. 2-வது அணியின் சுலோகத்தில் ஆட்சியாளருக்கு எதிரான கோசம் தொழிலாளர் பிரச்சனை என்பன மேல் ஓங்கி நிற்க, கூட்டணிக்கு எதிரான கோசமும், கணிசமான அளவு, தமிழ் ஈழக் கொள்கைக்கு எதிரான கோசமும் அமைந்திருந்தன. 3-வது பிரிவைப் பொறுத்தவரையில் கூட்டணி, தமிழ் ஈழக் கோரிக்கை சண்முகதாசனின் பிரிவு என்பவற்றிற்கெதிரான கோசங்கள்மேல் ஓங்கி இருந்தன. ஆட்சியாளருக் கெதிரான கோசமும் தொழிலாளர் கோசமும் ஓரளவு இருந்தன. 2-ம், 3-ம் அணிகளுக்கு இருந்த உற்சாகமும், வலுவும் கூட்டணியின் ஊர்வலத்தில் இருக்கவில்லை. மொத்தத்தில் 2-வது பிரிவே பொதுவில் மேல் ஓங்கிய தன்மையைப் பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விடுதலைப் பாதையில்

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்களின் விடுதலைப் பாதை நீண்டு கொண்டேபோய்க் கொண்டிருக்கிறது. இவ் விடுதலைப்பாதையில் சில மைல் தூரத்தைத்தான் நாம் கடந்துள்ளோம் ஆனால் இலக்கை அடைய இன்னு மதிக தூரம் போக வேண்டியுள்ளது இந்நிலையில் தமிழர் விடுதலைப் பாதையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பங்கு என்ன என்பதை நாம் ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி முக்கியமாக தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் ஒன்று சேர்ந்ததிலிருந்து ஆரம்பமாகியது. இந்திய தொழிலாளர் காங்கிரசும் இதில் ஓரளவு பங்கு கொண்டது. எனவே விடுதலைப்பாதையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்கை ஆராயும் போது இக் கூட்டணியின் ஆரம்ப முனைகளான தமிழக்காங்கிரஸ் கட்சியினதும் தமிழரசுக் கட்சியினதும் பங்கு இதில் உள்ளடங்கிறது.

இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றை எடுத்துப் பார்க்கும் போது சிங்கள மக்களால் நாம் நசுக்கப்படுவோம் என்ற பீதி தமிழ் மக்களிடையே நெடுங்காலமாக இருந்து வந்துள்ளதை நாம் அறிய முடிகிறது, சட்டசபையில் தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பிரதிநிதித்துவம் தொடர்பாக எழுந்த பிரச்சனையில் 1921ல்-சேர் பொன்னம்பலம் அருணசலம் தலைமையில் தமிழ்ப் பிரதி நிதிகள் இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறியது. 1931ல் அரசாங்க சபைத்தேர்தல் (State Council) யாழ்ப்பாணக்குடா நாட்டு மக்கள் முழுவதாக பகிஷ்கரித்தது. 1936ல் தனிச் சிங்கள மந்திரிசபை அமைக்கப்பட்டது என்பன இதற்கு ஆதாரங்களாக விளங்குகின்றன.

இப் பீதி காரணமாகத் தமிழ் மக்களின் பிரதி நிதிகள் இனவாரிப் பிரதி நிதித்துவம் அரசியலமைப்புப் பாதுகாப்புக்கள் என்பவற்றை ஆங்கிலேய ஆட்சியாளரிடம் எப்போதும் வலியுறுத்தி வந்தனர் இப் பின்னணியில்தான் 1944ல் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் உருவாக்கிய தமிழக்காங்கிரசும் அவரது ஐம்பது ஐம்பது கோரிக்கையும் எடுத்துப் பார்க்கப்படவேண்டும் இக்கோரிக்கை உண்மையில் தமிழ் மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்க முன்வைக்கப்பட்ட கோஷமோ அல்லது தமிழ் மக்களிடையேயும் அரசியல் சதுரங்கத்திலும் ஆதிக்கம் பெற முன்வைக்கப்பட்ட கோஷமோ என்பது கேள்விக்குரியது. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இந்தியாவில் ஜின்னாவைப்போல் தனி நாட்டையோ அல்லது கண்டிப் பிரதி நிதிகளுடன் சேர்ந்து ஒரு சமஷ்டி அரசியலமைப்பையோ கேட்டிருந்தால் அது நியாயமானதான ஜனநாயகரீதியானதான ஒரு கோரிக்கையாக இருந்திருக்க முடியும். ஆனால் ஒற்றை ஆட்சிப் பாராளுமன்றத்தில் ஒரு ஆளுக்கு ஒரு வாக்கு என்ற ஜனநாயக அடிப்படையிலிருந்து பிறழ்ந்து மக்கட் தொகையை கவனிக்காது சம பிரதிநிதித்தும் இருக்கவேண்டும் என்று கோரியது ஜனநாயகரீதியான கோரிக்கையாகக் கொள்ள முடியாது. இக் கோரிக்கையை அவர் முன்வைத்தமைக்குக் காரணம் தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று சிங்களத் தலைவர்களுடனும் கலந்துறவாடி தமது நிலையை உயர்த்தவேண்டும் என்ற அவரது உள்ளார்ந்த நோக்கமாக இருக்கலாம். சிங்களத் தலைவர்களுடன் இவர் உறவாடிய முறையை சோல்பரி ஆணைக்குழுவினர் அவதானித்து, இவருக்கும் சிங்களத் தலைவர்களுக்கு மிடையிலிருந்து இணைப்பையும், இவருக்குத் தமிழ் மக்களிடையே இருந்த செல்வாக்கையும் பயன்படுத்தி இரு இனங்களிடையேயும் ஐக்கியத்தை ஏற்படுத்தி தாம் சிபார்சு செய்யவிருந்த அரசியல் அமைப்பை இயங்கலாம் என்று அவர்கள் கருத்துக் கொண்டிருந்தனர் இதனால் 29 (2) என்ற சரத்தைத் தவிர வேறு எதுவித பாதுகாப்பையும் தமிழ் மக்களுக்கு அளிக்காத ஒற்றை ஆட்சி அரசியலமைப்பை சோல்பரிக் குழுவினர் சிபார்சு செய்தனர். ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னனி என்றும் கட்சியை அமைத்த திரு. C சுந்தரலிங்கம் இது தொடர்பாக வெளியிட்ட கைநூலுக்கு பின்பு முகவுரை வழங்கிய சோல்பரிப் பிரபு தமது அரசியலமைப்பு பின் இயங்கிய வாதத்தைக் கவனத்தில் எடுதது " அப்போதைய நிலையில் இவ்விதமான நிலை உருவாகும் என்று தான் எதிர்பார்த்திருக்கவில்லை. இப்படி எதிர்பார்த்திருந்தால் அப்படியான ஒரு அரசியலமைப்பை சிபார்சு செய்திருக்கமாட்டேன் எனக் குறிப்பிடுவது இதை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளது இதை விட 1948 ஆண்டு பிரஜா உரிமைச்சட்டத்துடன் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதைத்தொடர்ந்து எது வித நிபந்தனையோ கோரிக்கையோ இன்றி திரு. ஜி ஜி பொன்னம்பலம் திரு. டி எஸ். சேனநாயக்காவின் மந்திரிசபையில் சேர்ந்தது அவரது மனக்கருத்தை மேலும் எடுத்துக்காட்டுகிறது

1948-ம் ஆண்டு பிரஜா உரிமைச்சட்டத்தைத் தொடர்ந்து திரு பொன்னம்பலம் மந்திரி சபையில் சேர்ந்தமை இதுவரை காலம் அவருடன் ஒத்துழைத்து வந்த திரு. செல்வநாயகத்திற்கு திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உண்மைச் சொரூபத்தை எடுத்துக்காட்டியது தமிழினத்தின் இருள் ஆழ்ந்த எதிர்காலம் அவருக்குப் புலப்பட்டது. தமிழினத்தின் விடிவுகாண சமஷ்டி அரசியலமைப்பைக் கோரி சமஷ்டிக்கட்சி என்ற புதிய கட்சியை அவர் ஆரம்பித்தார்.

தமிழ் மக்களிடையே தாம் ஒருதனி இனம், இனவாரியாகத் தமது பிரச்சனைகள் தனிப்பட்டவை என்ற உணர்ச்சி இதுவரை காலமும் பரவலாகவும், ஆழமாகவும் இருக்கவில்லை. கல்வியறிவு கூடிய ஒரு மட்டத்தினரிடம் தான் அரசியல் விடயங்களைப்பற்றிய ஞானம் இருந்தது. இந்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழர் விடுதலைக் கூட்டணி?

நிலையில் தமிழ் மக்களிடையே தாம் ஒரு தனி இனம் என்வாரியாகத் தமது பிரச்சனைகள் தனிப்பட்டவை என்ற உணர்வை ஏற்படுத்திய பெருமை திரு. செல்வநாயகத்திற்கும் தமிழரசுக் கட்சிக்குமே பெரிதும் உரியவை என்பதை எவரும் மறுக்கமுடியாது. இந்த முறையில் திரு. செல்வநாயகம் இலங்கை வாழ்தமிழினத்தின் தந்தை என்ற இடத்தைப் பெறுகிறார். இன்று மலையகத் தமிழனுக்கு தானே முழுத்தமிழனுக்கும் என்று கூறி தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தமையால் அவர் தமிழினத்தின் தீர்க்கதரிசி என்னுமிடத்தைப் பெறுகிறார்.

தமிழினத்தின் விடுதலைப்பாதையில் அடுத்த முக்கிய கட்டம் 1956 தேர்தலாகும். இத் தேர்தலில் 24 மணித்தியாலயத்தில் தனிச் சிங்களம் என்ற கோரிக்கையை முன்வைத்து திரு பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி போட்டியிட்டது. இந் நிலையில் தமிழ் மக்களின் இன உணர்ச்சியும் மேலோங்கத் தொடங்கியது. தமிழ் மக்கள் தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் அமைந்த சமஷ்டிக் கட்சிக்குத் தமது பெரும்பான்மையான வாக்குகளை அளித்து அவர் நிறுத்திய 14 வேட்பாளர்களில் 10 வேட்பாளர்களைத் தெரிந்தெடுத்தனர். தேர்தலைத் தொடர்ந்து தனிச்சிங்கள சட்டம் அமுலுக்கு வந்தது. சிங்கள மக்களின் ஆதிக்கம் வலுக்கத் தொடங்கியது.

இந் நிலையில் தமிழ்ப்பகுதிகளில் வளர்ந்து வந்த சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கவும் சமஷ்டி இலக்கின் ஒரு கட்டமாகவும் பிரதேச சபை அடிப்படையிலான 1957 பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு தந்தை செல்வநாயகம் இணங்கினார். விவசாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றம், கல்வி, வைத்திய வசதிகள், வீடமைப்பு, சமூக சேவை, நீர்ப்பாய்ச்சல், வீதிகள் என்பவற்றின்மேல் தத்தம் பகுதிகளில் ஆதிக்கம் கொண்டவையாக இப்பிரதேச சபைகள் அமைய விருந்தன. இலங்கையின் வடமாகாணத்திற்கு ஒரு பிரதேச சபையும் கிழக்கு மாகாணத்திற்கு இரு பிரதேச சபைகளும் அமைய வேண்டுமென இவ் வொப்பந்தம் குறிப்பிட்டது. சமஷ்டிக் கட்சியினரை எதையாவது சாதிக்க விடுவதா என்ற காய்ச்சலில் தமிழ்க் காங்கிரசினர் இவ் வொப்பந்தத்தை எதிர்த்தனர். இனத் துவேஷத்திற்குத் தூபம் போட்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையில் கண்டியாத்திரை நடாத்தி இவ் வொப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்தனர்.

இதைத் தொடர்ந்து சமஷ்டிக் கட்சியினர் காலி முகத்திடல் சத்தியாக்கிரகம், சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் முதலியவற்றை நடாத்தித் தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் இப்போராட்டங்களில் முதலிடம் வகித்தார். இதற்கு எதிராக சிங்கள ஏகாதிபத்திய வாதிகள் 1958 இன ஒடுக்கலைக் கட்டவிழ்த்து தமிழ் மக்களை ஒடுக்க முற்பட்டனர். இதனால் தமிழ் மக்களுக்கு பெரும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டது.

1958 இன ஒடுக்கல் தமிழ் மக்களுக்கு அவர்களது நிலையை மேலும் எடுத்துக் காட்டியது. இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கிடையில், முழுவதாக இல்லாவிடினும் அடிப்படையில் ஒரு ஒற்றுமை இருந்தாலும் தலைவர்கள் எனப்பட்டவர்கள். இருபக்கமாகப் பிய்த்துக்கொண்டு நின்றனர், 1961 ல் சிங்கள ஆட்சியாளருக்கெதிராகச் சமஷ்டிக் கட்சியினர் ஒத்துழையாமை இயக்கத்தையும், சத்தியாக்கிரக இயக்கத்தையும் ஆரம்பித்துவைத்தனர். தமிழர் விடுதலைப் பாதையில் தமிழ்ப் பொதுமக்கள் பெருமளவு பூரணபங்கெடுத்த ஒரு போராட்டமெனின் இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தான் குறிப்பிடலாம். இப்போராட்டம் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு; திரிகோணமலை முதலிய தமிழ்ப்பகுதிகளின் ஏக காலத்தில் இடம்பெற்றது கட்சிவேறுபாட்டை மறந்து தமிழ்மக்கள் பலரையும் இதில் பங்கெடுக்கக் கூடியதான நிலையைச் சமஷ்டிக் கட்சியால் உருவாக்க முடிந்தது. தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றத்தலைவராக விளங்கிய திரு. மு. சிவசிதம்பரம் இதற்குப் பூரண ஆதரவைக்கொடுத்து இதில் நேரில் கலந்துகொண்டார். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் மந்திரியாக விளங்கும் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் மட்டக்களப்பில் இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார். ஒரு மாதகாலமாக யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகம் ஸ்தம்பிக்கப்பட்டது. ஆயினும் சிங்கள அரசாங்கத்தால் 24 மணித்தியாலமும் ஊரடங்குச் சட்டமும் இராணுவத் தலையீடும் இம்மக்கள் போராட்டத்தை முறியடிக்க முடிந்தது. தலைவர்கள் எனப்பட்டவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதும் இங்கு போராட்டத்தை தொடர்ந்து நடத்தப் புதிய தலைவர் தோன்றவில்லை? போராட்டம் தொடர்ந்து நடக்கவில்லை. இதற்குத் தமிழ்மக்கள் போதிய அளவு தயார் படுத்தப்படாமையே முக்கிய காரணமாகும். இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவில் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆங்கில ஆட்சியாளர் படைப்பலங்கொண்டு அடக்க முற்பட்ட பல சந்தர்ப்பங்களில் தலைவர்கள் சிறை செல்ல இயக்கம் தொடர்ந்து நடைபெற்றதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்

1961 லிருந்து தமிழ்க்கட்சிகளிடையே இணைப்பை ஏற்படுத்துவதற்கு திரு. மு. சிவசிதம்பரம் முன்னின்று உழைத்தார். இதன் காரணமாகத் தமிழ்க்காங்கிரசில் தமது அங்கத்துவத்தை இழக்கக்கூடிய நிலைக்குப் பலமுறை தள்ளப்பட்டார். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திரு. மு. சிவசிதம்பரத்தை தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேற்றவேண்டுமென்ற கருத்தை பலமுறை தெரிவிக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனினும் தனி நலத்தைக் கருதியல்ல தமிழ் மக்களின் இன நலத்தைக்கருதி இவ்விரு கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென்ற கருத்தை திரு, மு. சிவசிதம்பரம் கொண்டிருந்தார்.

1961-ம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டம்தான் இன்று வரையிலான தமிழர் விடுதலைப் போராட்டத்தில் முதலும் கடைசியுமான மக்கள் போராட்டமாகும். [Mass Struggle) இதன் பின் இத்தகைய மக்கள் போராட்ட மெதுவும் நடைபெறவில்லை. இந்த அளவுக்கு மேல் போராட்டத்தை நடத்தக்கூடிய நிலை சமஷ்டிக் கட்சியில் இருக்கவில்லை என்பதைத்தான் நாம் இதற்குப் பிந்திய சம்பவக்கோவைகளிலிருந்து உணரமுடிகிறது. ஒரு இனத்தின் வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமான தலைவர்கள் தோன்றுகிறார்கள். அவர்கள் அச் சமுதாயத்தின் சூழ் நிலைக்கும் அப்போதைய தேவைக்கு மேற்ப உருவாகிறார்கள். மேல்மட்ட மத்தியதர வகுப்பினர் முன்னணிவகுத்த தமிழ்ச் சமூதாயச் சூழ் நிலையில் ஆங்கிலக்கல்விபயின்ற நியாய துரந்தர்கள், வைத்தியர்கள், சிறுதொழிலதிபர்கள் முதலியவர்களிடமேயிருந்து தலைமை உருவாக முடியும். ஆனால் இத்தலைமை தனது வர்க்ககுணங்களுக்கேற்ப சில எல்லைகளுக்குட்பட்டதாகவே அமையமுடியும். இவர்களுடைய வர்க்கத்தன்மை (class nature) விடுதலைப் போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் இவர்களுக்குப்போக இடமளியாது. 1961-க் குப் பிந்திய தமிழர்வரலாறு இதை எடுத்துக் காட்டுகிறது. சமஷ்டிக் கட்சிக்கும் ஓரளவு தமிழ்க் காங்கிரசுக்கும் தமிழ் மக்களின் பேராதரவு இருந்து வந்தது உண்மைதான். ஆனால் அன்று தொட்டு இன்றுவரை இக்கட்சிகளின் தலைவர்களாக இக் கட்சிகளின் உந்து சக்திகளாக பெரும் பாலும் ஆங்கிலக் கல்விபயின்ற மேல் மட்ட மத்திய தர வர்க்கத்தினரே விளங்குகின்றனர். தலைவர்களில் சிலர் தந்தை செல்வாவைப் போல் எளிமை வாய்ந்தவர்களாக விளங்கினாலும் இவர்களின் பின்னுள்ள உந்து சக்திகள் வர்க்க நலனில் அக்கறை கொண்டவைகளாகவே உள்ளன. இவர்கள் "கூழுக்குமாசை மீசைக்குமாசை" என்று நிலையில் தாம் தற்போது அனுபவிக்கும் வசதிகளைத் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். அதே நேரத்தில் தமிழின் விடுதலையையும் காண வேண்டும், என்ற நோக்கம் கொண்டவர்களாயிருக்கிறார்கள். இப்படித் தள்ளாடும் வர்க்கத்தினர் ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு உறுதியான தலைமையை அளிக்க முடியாது.

கட்டப் பொம்மன் ஆண்ட காலத்தில் பாஞ்சாலம் குறிச்சியிலிருந்து ஒரு முயல் வெளியே வந்து உலாவியதாம். அதை ஒரு நரி கண்டு துரத்தத் தொடங்கியதாம். அந்த முயல் ஓடத் தொடங்கி பாஞ்சாலம் குறிச்சி எல்லையை அடைந்ததும் நரியைத்திருப்பி எதிர்த்ததாம் என்பது ஒரு கதை. இதற்கு ஒருவர் பாஞ்சாலங் குறிச்சியின் எல்லையில் மதில் இருந்தது. முயலால் அதைத் தாண்ட முடியவில்லை. இதனால் முயலுக்கு நரியை எதிர்ப்பதைத் தவிரவேறு வழியில்லை. இதனால் எதிர்த்தது என்று விளக்கம் கூறினார். தமிழ் இனத்தின் மேல் மட்ட மத்திய தர வகுப்பினருக்கு மதிலை எதிர் நோக்க வேண்டிய நிலை இல்லை, அவர்கள் இங்கிலாந்துக்கு மூட்டை கட்டலாம். அங்கு போய் வசித்துத் தொழில் செய்யலாம். தங்கள் பிள்ளைகளை அங்கு அனுப்பிப் படிப்பித்து வேலையாக்கலாம். சொந்தத்தில் தொழில் செய்து பணம் திரட்டலாம். ஆனால் சாதாரண விவசாய தொழிலாள மக்களுக்கு இது முடியாது. சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் அரசியல் பொருளாதார ஒடுக்கல்களிலிருந்து அவர்கள் தப்ப முடியாது அவர்களது பிள்ளைகளை முன்நேற்ற ஒரு வித குறுக்கு வழியும் கிடையாது. அவர்களிடம் தற்போதைய சமுதாய அமைப்பில் இழந்து போவதற்கு அதிகமாக ஒன்றுமில்லை. எனவே அவர்களுக்குத் தமது நிலையைப் பாதுகாக்க சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதை விட வேறு வழி கிடையாது. இவர்களும் தமிழ் மூலம் கல்விகற்ற (ஆங்கிலக் கல்வி மூலம் சொகுசுக்கும் போலி மதிப்பீடுகளுக்கும் உட்படாத) இவர்களது வாரிசுகளான இளைஞர்களும் தான் செய் அல்லது செத்து மடி என்று தமிழர் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியும். ஏனெனில் இவர்களுக்குத்தான் போராட்டத்தின் மூலம் மாத்திரமே சுபீட்சத்தைக் காண முடியும். என்ற ஒரே நம்பிக்கை இருக்க முடியும். அடங்கி ஒடுங்கி வாழ்வதால் மேலும் நசிந்து போகத்தான் முடியும் என்ற உணர்வு ஏற்பட முடியும்.

1961க்குப் பின் சமஷ்டி தமிழ்க்காங்கிரஸ் என்பவற்றின் போக்குகள் இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றன. 1961க்குப் பின் ஒரு மக்கள் போராட்டத்தை நடாத்த இவைகள் முயலவில்லை. சுதந்திரப் பாதை கரடுமுரடானது எத்தனையோ தியாகங்களைப் புரியவேண்டியது என்று கூறித் தமிழ் மக்களைத் தயார் படுத்த முயலவில்லை. நீங்கள் சும்மா இருங்கள் நாங்கள் எல்லாம் வென்று தருகிறோம் என்று செயலாற்ற முற்பட்டன. மீண்டும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து உரிமைகளைப் பெறமுடியுமென்று கூறி 1966-ல் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டார்கள். தாழப்போகிறவன் துரும்பைப் பிடித்த கதையாகத்தான் இது முடிந்தது 1970 தேர்தலின் போது சிங்களக் கட்சியினர் எமது ஆதரவின்றி ஆட்சிக்கு வரமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆகவே இதனைப்பாவித்து உரிமைகளை வென்று தருவோம் என சமஸ்டிக் கட்சியினர் தேர்தலுக்கு நின்றார்கள். ஆனால் சிங்களக் கூட்டு முன்னணியினர் மூன்றிலொரு பங்கிற்கு மேலான ஸ்தானங்களைப் பெற்று இவர்கள் பகற்கனவைச் சிதறடித்தார்கள்

1970 இலிருந்து தமிழ்மூலம் கல்விகற்ற இளைஞர்கள் சாதாரண விவசாயத் தொழிலாள மக்களின் வாரிசுகள் விழித்தெழத் தொடங்கி விட்டார்கள். 1970-ல் அமுல் நடாத்தப்பட்ட பல்கலைப் புகுமுகத்தரப்படுத்தல் முன்னேற அலாவி உழைத்த இவர்களில் பலரை நேரடியாக பாதித்தது. 1971-ல் நடந்த சிங்கள இளைஞர் புரட்சி தாங்களும் சமுதாயத்தின் முன்னணியில் நின்று மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் என்ற கருத்தை தமிழ் இளைஞர் மத்தியிலும் தோற்றுவித்தது. சமஷ்டிக் கட்சியினரும், தமிழ் காங்கிரஸ் கட்சியினரும் தமிழ் இளைஞர்களின் வேகத்திற்கு ஈடுசொல்ல வேண்டி ஏற்பட்டது! இவர்கள் தம்முள்ளான வேறுபாடுகளை விடுத்து தமிழர் கூட்டணி என்ற பெயரில் ஒன்றுபட்டனர், 1974-ல் நடைபெற்ற உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் பொலீசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ரின் மிலேச்சத்தனமான தாக்குதலின் விளைவாக 9 தமிழ் யிர்கள் பலியானது இளைஞர்களின் ஆவேசத்தை இன்னும் தூண்டியது. தமிழின விடுதலைக்கு புதிய வழிகளைக்காண இளைஞர் முற்பட்டனர் இளைஞர் வன்முறை அதிகரித்தது தமிழர் விடுதலைப் போராட்டத்திற்குக் களப்பலியாகத் தியாகி சிவகுமாரன் தனது உயிரை அளித்தான். 42 தமிழ் இளைஞர் வரை சிறை சென்றனர். இளைஞர் உந்துதல்களுக்கு ஈடுகொடுக்க தமிழர் கூட்டணியினர் 1975ல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தமிழ் ஈழம் என்ற கோரிக்கையைமுன் வைத்தனர். இதன் பின் நடந்த வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழ் ஈழம் தமது குறிக்கோளென தமிழர் கூட்டணியினர் பிரகடனப் படுத்தினர். இம் மகாநாட்டில் இந்தியத் தொழிலாளர் காங்கிரசும் பங்குபற்றியது. இதனைத் தொடர்ந்து தமிழர் ஒற்றுமைக்குக் குறுக்கே நிற்பவர்களாகக் கருதப்பட்ட அரசியல் வாதிகளை ஒழித்துக் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன். திரு. அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். திரு.சி. அருளம்பலம் கொலை முயற்சிக்குள்ளானார். தமிழ்த் தலைவர்கள் ஒன்று படவேண்டும். அவர்கள் ஒன்று பட்டால் எல்லாம் சரிவந்து விடும் என்ற கருத்தையும் நடைமுறையில் பரீட்சித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தமிழிளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை தொடர்ந்து ஏற்றுக்கொண்டிருந்தனர்.

1977ல் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழினத்தைப் பொறுத்த வரையில் இத் தேர்தலை தமிழ் ஈழம் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பாகப் பிரகடனம் செய்து தேர்தலில் போட்டியிட்டனர் இளைஞர்கள் தமிழர் கூட்டணிக்குப் பேராதரவு அளித்தனர்: தமிழ்ஈழப் பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நிறுத்திய 20 வேட்பாளர்களில் 19 வேட்பாளர்களை, தெரிந்தெடுத்ததன் மூலமும் இவர்களில் பலரை மிக அதிகப் படியான வாக்குகள் மூலம் தெரிந்தெடுத்ததன் மூலமும் தமிழீழ மக்கள் தமிழ்ஈழக் கோரிக்கைக்கு தமது மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்தனர். இம் மக்கள் தீர்ப்புக்கு எதிராக சிங்கள ஏகாதிபத்திய வாதிகள் 1977ல் ஆகஸ்ட் இன ஒடுக்கலைக் கட்ட விழ்த்து விட்டு தமிழ் மக்களை ஒடுக்க முற்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் அப்போது பிரதமருமான திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன போர் என்றால் போர் சமாதானம என்றால் சமாதானம் என்று வானொலியில் சவால்விடுத்தார், சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களும் மலையகத் தமிழ் மக்களும், வவுனியாப் பகுதித் தமிழ் மக்களும் இவ் வின ஒடுக்கலால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இவ்வின ஒடுக்கல் தமிழ் ஈழத்தைப் பெறுவதற்கு முன் தமிழ் மக்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளத் தயாரற்ற தன்மையில் இருந்ததை எடுத்துக் காட்டியது. சரியான தலைமை, ஒழுங்கமைப்புத்திட்டம் தமிழ் மக்களிடம் இல்லாமையும் அரசியல், சமூக, பொருளாதார அடிப்படைகளில் அவர்களின் தயாரற்ற தன்மையையும் எடுத்துக் காட்டியது. வாக்குச் சீட்டுகளில் இரண்டு குறுக்குக் கோடுகளைப் போடுவதன் மூலம் தமிழ் ஈழம் கண்டு விடலாமென்ற பலரின் பகற்கனவை அது சிதறடித்தது.

உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக்காட்டியது. இதனைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் விரக்தியுற்ற இளைஞரில் ஒரு பகுதியினர் பயங்கரவாத நடவடிக்கைகளில் இறங்கினர். தமிழர் விடுதலைப் பாதையில் இவ்விளைஞர் பங்கு எவ்வாறாக இருப்பினும் இவ்விளைஞர்கள் மற்றெவரும் செய்யாத அளவு சிங்கள அரசாங்கத்தை உலுப்பிவைக்கத்தான் செய்துள்ளனர்.

முக்கியமாகத் தமிழ் இளைஞர்களின் உத்வேகத்திற்கு ஈடு கொடுக்கவே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை தமிழ் ஈழக் கோரிக்கைக்கு இணங்கியது' தமிழர் விடுதலைக் கூட்டணியின் உந்து சக்திகளாக விளங்கும் உயர்மட்ட மத்தியதர வர்க்கத்தினர் தாமாக இந்நிலைக்கு உடன்பட்டிருக்க முடியாது. இவர்களில் பலருக்கு நிலையான நலன்கள் சிங்களப் பகுதிகளில்தான் உள்ளது. இவர்களுடைய வாக்கு நலன்களும் வர்க்கத்தன்மையும் தனிநாட்டுக் கோரிக்கையை விரும்புவதாக இருக்கமுடியாது' திரு ஜி ஜி. பொன்னம்பலம் ஒருபோதும் தனிநாட்டை விரும்பவில்லை. அவரது வர்க்கத்தன்மை [class nature] இதற்கு இடம் கொடுத்திருக்க முடியாது. எனவே தாம் ஆழமாக விரும்பாத ஒன்றினை இந்த வர்க்கத்தின் உந்துதலில் இயங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை எவ்வாது பெற்றுக் கொடுக்க முடியும். எல்லா அரசியலுக்குப் பின்பும் ஒரு வர்க்கம் இருக்கிறது. இந்த வர்க்கத்தை இனங்கண்டு கொள்ளாதவரை மக்கள் ஏமாற்றப் படுவார்கள் என்று லெனின் கூறியுள்ளார்.

சமஷ்டிக் கட்சியும் அது அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் மக்களிடையே ஒரு இன உணர்ச்சியை ஏற்படுத்துவதில் அவர்களிடையே ஓரளவு ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் குறிப்பிடக்கூடிய அளவு வெற்றிகண்டுள்ளன. இதைப் பொறுத்தவரையில் வரலாற்று அரங்கில அவர்கள் தமது பங்கைச் சிறப்பாகச் செய்து முடித்துள்ளனர். ஆனால் இதற்குமேல் அவர்கள் அவர்களது வர்க்கத்தன்மைக்கும் மேலாகச் சென்று தமிழ் ஈழம் காண்பார்கள் என்று கருதுவது சமுதாய வரலாற்றின் அடிப்படை விதிகளுக்கு முரணான ஒரு கருத்தாகும், மாவட்ட மந்திரிகள் நியமன விடயத்தில் கூட்டணிப்பிரதி நிதிகள் சிலர் காட்டிய வழுவழுப்புத் தன்மை, சோசலிஷ தமிழ் ஈழத்தை அமைக்க மேற்கைரோப்பிய முதலாளித்துவ நாடுகளுக்குக் காவடி எடுக்கும் தன்மை இனத்துவேஷ வாதிகளினதும், பிற்போக்கு வாதிகளின்தும் தலைவரான மொரார்ஜிதேசாயை நீதித்தரகராக நிற்கும்படி காலைப் பிடிக்கும் நிலமை என்பன இவர்களது மனோநிலையை எடுத்துக்காட்டுகிறது,

கோழிக்குஞ்சு எப்போதும் முட்டை ஓட்டிற்குள் இருக்க முடியாது. அதுபோன்று தமிழ் மக்கள் இதுவரை ஒன்று திரட்டி வைத்திருக்க கூட்டணி என்னும் ஓடு உதவியது. தமிழ் மக்களிடையே இன உணர்வு ஏற்பட்டுவிட்டது. ஓரளவு ஐக்கியம் ஏற்பட்டுவிட்டது. முட்டை ஓட்டிற்குள் நடக்கவேண்டிய வேலை நடந்து விட்டது. இனிமேல் தற்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் ஓட்டை உடைத்துக்கொண்டு மக்கள் வெளியே வர வேண்டும். இல்லாவிடில் அழுங்கிப்போகவேண்டி ஏற்படும்.

[தொடர்ச்சி 12-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழர்களும் எதிர்காலத்

கடந்த ஒரு நூற்றாண்டிற்கு முன் எமது வரலாற்றை நாம் திரும்பிப்பார்ப்போமாகில் கடந்த காலத்தில் இருந்த தமிழ் தலைவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிவதோடு, எதிர்காலத்தில் எமக்கு எப்படியான தலைவர்கள் தோன்ற வேண்டும் என்பதை ஆராய்ந்தறியவும் வாய்ப்பாக இருக்கும்.

கடந்த காலத் தமிழ்தலைவர்களின் பின்னணி அவர்கள் சார்ந்து நின்றவர்க்கம் எத்தகையது என்பதை நாம் முதற்கண் தெரிந்து கொள்ளவேண்டும். கடந்த கால தமிழ் தலைவர்கள் ஆங்கிலக்கல்வியில் ஆழமாகத்தோய்ந்த நடுத்தரவர்க்கத்தின் நலன் காக்கும் சட்ட சீர்திருத்தவாத தலைவர்கள் என்பதை மறுக்க முடியாது. அத்தோடு இவர்கள் கீழ்மட்டத்திலுள்ள பெரும்பான்மையான சாதாரண மக்களின் நலன்களில் அக்கறை அற்றவர்களாக இருந்தார்கள் என்பதும் தெளிவாகிறது.

## தேசிய வாதம்

இந்தப்பின்னணியில் இத்தீவில் உள்ள சிறீலங்காவில் அக்கால சிங்களத்தலைவர்களையும் தமிழீழத்தில் இருந்த அக்கால தமிழ்தலைவர்களையும் ஒப்பிட்டுப்பார்க்கின் அன்றைய தமிழ்தலைவர்கள் எவ்வளவு தூரத்திற்குக் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கும் விழிப்புணர்ச்சிக்கும் பாடுபட்டார்கள் என்பதை அறிவதோடு எவ்வளவு தூரத்திற்குத் தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை விடுதலை உணர்வை ஊட்டத்தவறினார்கள் என்பதையும் அறிய முடிகிறது. அன்றைய தமிழ்த்தலைவர்கள் எப்படி ஆங்கிலக் கல்வியில்தோய்ந்த நடுத்தரவர்க்கத்தின் நலன்காக்கும் சட்ட சீர்திருத்தவாத தலைவர்களாக இருந்தார்களோ அவ்வாறே கடந்த கால சிங்களத்தலைவர்களும கல்வி, வர்க்க, சட்ட சீர்திருந்தவாதிகளாக இருந்தார்கள் அத்தோடு சிங்கள மக்கள் மத்தியில (சிங்கள) தேசியவாதத்தை ஏற்படுத்தக் கூடிய தலைவர்கள் இருந்தார்கள். அனகாரிக தர்மபால போன்றவர்கள் இதில் அடங்குவர். அதே போன்று தமிழ் மக்களின் தமிழ் தேசிய உணர்வை ஏற்படுத்தக்கூடிய தலைவர்கள் இருக்கவில்லை: தீர்க்கதரிசனமற்ற தன்மையே பிற்காலத்தில் அதாவது இன்று தமிழ்த் தேசிய இனம் பல இன்னல்களுக்கு ஆளாவதற்குக் காரணமாக இருந்தது. தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய வாதம் உருவாகாது பின் தள்ளப்பட்டதற்கு அக்கால தலைவர்களே முற்றிலும் மூலகாரணமாக இருந்தார்கள்.

## வர்க்க உறவு

ஒரு புறம் வர்க்க நலன் காக்கும் சிங்கள தமிழ்த் தலைவர்கள் ஒருங்கிணைந்து ஒற்றையாட்சி ஒரு நாடு என்று செயற்பட மறுபுறம் சில சிங்களத்தலைவர்களால் சிங்களத் தேசியவாதம் ஊட்டப்பட்டது. இச் சிங்களத்தேசியவாதேம முழு இலங்கைக்குமான தேசியவதமாக நாட்டின் வாதமாக அதாவது ஒரு நாடு என்று சிங்கள தமிழ் மக்கள் நம்பும்படி திணிக்கப்பட்டது. சிங்களத் தலைவர்களுடன் கைகோர்த்து நின்று பிரித்தானியருக்கெதிராகப் போராடிய தமிழ்த்தலைவர்கள் தமிழர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கவில்லை. இத்தகைய தூரப்பார்வையற்ற தமிழ்த்தலைவர்களில் அக்காலத்தில் முன்னணியில் நின்றவர்கள் சேர் பொன் இராமநாதன், அருணாசலம் போன்றவர்கள் ஆகும்.

## சிங்கள பேரின வாதம்:

ஆனால் 1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின் சட்ட சீர்திருத்தவாத தலைவர்களின் செல்வாக்கு விழ்ச்சியடையத் தொடங்கியது. அத்தோடு சிங்களத் தேசிய வாதம் பரவலாக வளர்ச்சியடைந்து ஆதிக்கம் செலுத்தியது. இச்சந்தர்ப்பத்தை திரு. எஸ். டபிள்யு, ஆர். டி. பண்டாரநாயக்கா பயன்படுத்தி சிங்கள மக்களின் ஏகோபித்த தலைவரானார் பண்டாரநாயக்காவின் தலைமையில் சிங்களத் தேசிய வாதம் கொடி கட்டிப்பறந்ததோடு அதுவே முழு இலங்கைக்குமான குரலாக எழுப்பப்பட்டது இதே நேரத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் தேசிய உணர்ச்சியை விடுதலை உணர்வைத்தட்டி எழுப்பக் கூடிய தலைவர்கள் இருக்கவில்லை பதிலாக தமிழ்த்தலைவர்கள் மத்தியில் கட்சி ரீதியான போட்டிகளும் பூசல்களும் மலிந்து கிடந்தன. இத்தகைய தலைவர்கள் மக்களின் நலன்களைக் கவனியாது தங்களது அரசியல் நலன்களில் மட்டும் கண்ணுயிருந்தார்கள்

## மக்கள் போராட்டம்

1961ல் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டம் தமிழர்கள் மத்தியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது கட்சி வேறுபாடு கருத்து வேறுபாடு என்பன பின் தள்ளப்பட்டு சகல தமிழ்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் குதித்தன. சில ஆதரவு காட்டின. சுமார் $1\frac{1}{2}$ மாதம் நடைபெற்ற இந்தச் சாத்விக போராட்டம் தமிழ் மக்கள் மத்தியில் ஐக்கியததை உருவாக்கியதை மறுக்க முடியாது. ஆனால் இப்போராட்டம் தொடர்ச்சியாகவோ நீண்ட கால போராட்ட அமைப்புக்கள் திட்டங்கள் தயாரிப்புகளைக் கொண்டதாகவோ இருக்கவில்லை. அதற்குக்காரணம் சரியான தலைமை இல்லாமையாகும். இருந்தும் இச் சத்தியாக்கிரக போராட்டம ஒரு பெரும் உண்மையை வலியுறுத்துகின்றது அதாவது தொடர்ச்சியும் வளர்ச்சியுமான ஒரு போராட்டத்ினூடாக இரத்தம் சிந்துவதினூடாக ஒரு மாபெரும் பொதுசன ஐக்கியத்தை கட்டி எழுப்ப முடியும் என்பதுதான்

1961ல் நடந்த சத்தியாக் கிரகம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவ அரசியல் பிரதிநிதிகளால் நடத்தப்பட்டது. ஆனால் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதுடன் அச் சத்தியாயக்கிரகம் தோல்வியடைந்தது. தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின் தொடர்ந்து போராடக் கூடிய தலைவர்கள் இருக்கவில்லை உருவாக்குப்படவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தலைமைத் தகுதிகளும்

— சி நா —

ஆனால் இந்திய விடுதலைப்போராட்டத்தின் தன்மை வேறு விதமாக இருந்தது. காந்தி போன்ற தலைவர்கள் சிறைப்பட்டாலும் போராட்டம் தொடர்ந்து நடந்தது. தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும் நல்ல தலைவர்கள் வல்ல தலைவர்கள் தோன்றினார்கள். அதன் வெற்றிக்குக் காரணம் மக்களை வழிநடத்திச் சென்ற தலைவர்களின் தீர்க்க தரிசனமான திட்ட வட்டமான வெகுசன தயாரிப்பு என்பது தெளிவாகிறது. பதிலாக ஈழத்தமிழர்களின் 1961 ஆண்டுச் சத்யாக்கிரக போராட்டம் தலைவர்களின் தகுதியின்மையை எடுத்துக்காட்டியது.

1970- 77 தமிழ்த்தலைவர்களின் ஐக்கியம் உருவாக்கப்பட்டது அவர்களின் திடீர் மறைவுகளின் பின் சில மாறுதல்கள் ஏற்பட்டன பின்னிருந்த தலைவர்களின் கோரிக்கைகள் அதிகரித்தன அதன் பின் மாணவர் பேரவையால் தொடக்கப்பட்ட தரப்படுத்தல் போன்ற போராட்டங்களும் சிங்களத் தேர்ச்சி வேலையில் பாரபட்சம் காட்டுவதற்கெதிரான கிளர்ச்சிகள் என்பனவும் இடம் பெற்றன தமிழ்த்தலைவர்களின் மறைவின் பின் தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டுத் தேர்தலில் வெற்றி பெற்றன

## இளைஞர்கள் :

இது இவ்வாறு இருக்க ஈழத்தமிழ் இளைஞர்கள் மத்தியில் சோசலிசக் கருத்துக்கள் பரவத்தொடங்கியுள்ளன ஆயினும் 70-ல் சிங்கள இளைஞர் மத்தியில் சோசலிசக் கருத்துக்கள், திட்டங்கள், அமைப்புக்கள், தலைமைகள் வளர்ந்த அளவிற்குத் தமிழ் இளைஞர் மத்தியில் வளரவில்லை. தமிழ் இளைஞர் மத்தியில் இன்னும் சரியான ஐக்கியமோ அரசியல் தெளிவோ தலைமையோ ஏற்படவில்லை என்பதை மறுப்பதற்கில்லை

## புதிய தலைமை

இனித் தமிழர்களின் எதிர்காலப் போராட்டம் சாத்வீகமா? பலாத்காரமா? எந்த வழி சாத்தியமானது? யார் இத்தகைய போராட்டத்தை நடத்துவார்கள்? தலைவர்கள் எங்கிருந்து தோன்றுவார்கள்? விடுதலைக் கூட்டணி இதை நடத்துமா? அல்லது வேறு இயக்கம் சக்திகள் இப் போராட்டத்தை நடத்த விடுதலைக்கூட்டணி விட்டுக்கொடுக்குமா?என்பதும் கேள்விகள்தான். விடுதலைக் கூட்டணி போராட்டத்தை நடத்த வலுவற்றது என்பதை அதனுடைய கடந்த கால வரலாறு எண்பித்துள்ளது. ஆனால் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிற்கப்பால் மாணவர்கள் அண்மைக் காலத்தில் நடத்திய போராட்டமும் ஆங்காங்கே மறைமுகமாகச் செயல் பட்டு வரும் சில பலாத்கார வழி இயக்கங்களும் விடுதலைக் கூட்டணியை விட வேறு ஒரு சக்தி தமிழர்களுக்குள் தோன்றக்கூடும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன,

ஆனால் தன் பலத்தையும் மாற்றான், பலத்தையும் அறிந்து மாற்றானுக்குப்பாதகமாக ஏற்படும் நெருக்கடியான நிலைமைகளை உணர்ந்து மக்கள் சக்தியை ஒன்று திரட்டி திட்டமிட்டபடி ஒரு பாரிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் உருவாக வேண்டும். இத்தகைய தலைவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளையும் நாம் ஆராய்வது அவசியமாகும்.

## தலைமைத் தகுதிகள்

1 நடு நின்று மக்களோடு மக்களாக மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக் கூடிய தலைவர்கள் உருவாக வேண்டும்.

2 எமது சமூக பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து அதை நடத்திச் செல்லக் கூடியவர்களாகவும் சிந்தனைத்தெளிவும் தீர்க்கதரிசனமும், இன்று மக்கள் நடக்க வேண்டிய சரியான மார்க்கம் அதற்குரிய திட்டங்கள் அமைப்புக்களைத் தெரிந்து கொண்டு மக்களை அதற்காகத் தயார் செய்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

3 திட்டத்தை நடை முறைப்படுத்தப் பாராளுமன்றத்திற்கப்பால் எமது கிராமத்திலும் வீதிகளிலும் வயல்களிலும் நின்று மக்களுக்கு விளக்கி வழிகாட்ட வல்லவர்களாவும் நல்லவர்களாகவும் இருக்கவேண்டும்'

4 சகல கட்சிகளையும் இயக்கங்களையும் ஒரு கொடியின் கீழ் ஒன்று படுத்தக் கூடியவர்களாவும் அதே வேளை சிங்கள முற்போக்குவாத இயக்கங்களோடு தொடர்புகொண்டு தமிழ் மக்களின் நிலைமைகளை விளக்கி அவர்களது அனுதாபத்தையும் ஆதரவையும் பெறக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்.

5 தங்கள் பிரசாரத்தால் வெளி நாட்டவர்களுக்குத் தமிழ் மக்களின் பிரச்சனைகளை விளக்கி சர்வ தேச அரங்கில் தமிழர்களின் பிரச்சனைகளை உலகமயமாக்குவதோடு வெளி நாடுகளில் வாழும் தமிழர்களையும் ஒன்று சேர்த்து ஒரு பூரண விடுதலை [அரசியல் சுதந்திரம் பொருளாதார சமத்துவம் சமூக சகோதரத்துவம்]ப் போராட்டத்தை நடத்தக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்,

இத்தகைய தகுதிகளைக் கொண்டுள்ளவர்களே தமிழ் மக்களின் எதிர்காலத்தலைமைக்குத் தகுதியுடையவர்கள் இத்தகைய தலைவர்கள் போராட்டத்தினூடாகவே தோன்றுவார்கள், அப்போது தான் அவர்களை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை நாம் மறக்கவே கூடாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரித்திரியா: விடுதலைப்

கடந்த மாதம் கவலையடைந்த ஒரு தொகுதி பத்திரிகை நிருபர்கள் எரித்திரியாவிலிருந்து காட்டுமுக்கு வந்தார்கள், எரித்திரியாவிலிருந்து 17 வருடங்களாக 35 லட்சம் மக்கள் தமது பூரண அழிவைத் தவிர்க்கப் போராடுகிறார்கள். பத்திரிகை நிருபர்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்தனர். அவர்கள் அங்கு முன்னேறும் டாங்கிகளையோ, பெரும் சண்டைகளையோ, காணவில்லை. வியட்னாம் போரில் பத்திரிகை நிருபராக இருந்த ஒருவர் அங்கு போரே நடைபெறுவதாக தெரியவில்லை எனக் கூறினார்.

கடந்த மாதம் எரித்திரியாவில் சராசரியாக ஒவ்வொரு இரவும் கெப்ராப்டெமிரியன் (வைத்தியர்) உடல் அங்கங்களை மெழுகுதிரி வெளிச்சத்தில் அறுவைச் சிகிச்சை செய்தார். இது சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சியாகும். அவர் இவ்வாறு கடந்த இருவருடங்களாக அமைராவில் அமெரிக்கன் ஆஸ்பத்திரியில் நர்ஸ் ஆக தொழிற் பட்ட பொழுது பார்த்த அறுவைச்சிகிச்சைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு செயல்படுகின்றார். இதில் ஆச்சரியம் என்னவெனில் அவர் சேகரித்த வைத்திய உபகரணங்களும் ஒழிந்து இப்பொழுது ஒரு வாளையும் மதுசாரத்தையும், வாயடைக்கும் துணியையும் உபயோகித்தே சிகிச்சை செய்கிறார். எரித்திரியாவில் உள்ள ஏனைய ஆஸ்பத்திரிகளைப் போன்று இவருடைய ஆஸ்பத்திரியிலும் சகலமருந்துகளும் முடிவு பெற்றன. இங்கு டிரெய்ஜ் எனும் முறை கையாளப்படுகின்றது, இதன்படி மிகவும் சுகவீனமானவர்கள் இறக்க விடப்பட்டு உயிர் தப்பக்கூடியவர்களுக்கே மருந்து கொடுக்கப்படுகின்றது.

கடந்த மாதம் எரித்திரியாவில் கொகெனே என்னும் கிராமம் அதிகாலையில் சோவியத்யூனியனால் வழங்கப்பட்ட எதியோப்பியமிக் - 21 விமானங்களினால் நுண்துளைக்குண்டு வீசப்பட்டது. இஸ்ரேலினால் வழங்கப்பட்ட இந்த நுண்துளைக்குண்டுகள் ஊசிகளை [நுண்ணிய] பரப்புகின்றன. இவை உடலின் ஊடாக துளைத்துச் செல்வதால் கதிர்களால் அவதானிக்கமுடியாது. மெதுவான சாவைத்தருகின்றன. ஆனால் கடந்த மாதமும் எரித்திரியாவின் வாழ்விற்கான நீண்டகாலப் போராட்டத்தின் காலத்தைப் போன்றதே, இங்கு படங்களையோ சிறந்த போர் விமானங்களையோ பெறமுடியாது. என்னைப்பொறுத்த மட்டில் எரித்திரியாவின் கதை ஒரு விசேடமானது.

எரித்திரியாவுக்கும் எத்தியோப்பியாவுக்குமான போராட்டத்தை நேர அட்டவணைப்படி விபரிக்க முடியாது. சர்வதேச அவதானத்துடனும் செய்தித் தொடர்புகளுடனும் சைகோன் [வியட்னாம்] போன்ற நகரங்கள் வீழ்ச்சியுற்ற பொழுது அவதானித்தது போன்று அவதானிக்க முடியாது. கிசாங்க விட மோசமான சண்டைகள் நடைபெற்றுள்ளது. மைலாய் விட மோசமான அழிவுகள் நடந்துள்ளன, ஆனால் போரை அவதானிக்க அங்கு கெலிகொப்டர் வசதியில்லை. ஒட்டகத்தில் சென்றே பார்க்கும் சூழ்நிலை உள்ளது.

இங்கு யார் நல்ல நண்பர்கள் கெட்டவர்கள் எனக்கூற முடியாது, 1945ம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற 33 போர்களில் எரித்திரியா போருக்கு 'மேற்கு சார்பு' அல்லது சோவியத் சார்பு அல்லது மார்க்ஸிட் போராட்டம் என விபரிக்க முடியாது. எரிட்டியாவின் எதிரிகள் சகல வித அரசியல் கொள்கை நாடுகளிலிருந்தும் வந்துள்ளன. ஏகாதிபத்திய எத்தியோப்பியாவிலிருந்து இன்றைய புரட்சிகர எத்தியோப்பியர் வரை அமெரிக்காவிலிருந்து ரஷ்யா வரை இஸ்ரேலிலிருந்து கியூபா வரை மாறி மாறி எதிரிகளாக இருந்துள்ளனர்.

உண்மையைக்கூறின் இந்த அடக்கப்பட்டு கைவிடப்பட்ட நாட்டின் போராட்டம் வீரதீரமானது. அத்துடன் கிஸிங்கர் பிரசினேஸ் தத்துவப்படி உலகம் ஒரு சதுரங்கம் இங்கு சிறிய பின்தங்கிய நாடுகள் காய்கள் பணயக்காரர்கள் இவற்றை விரும்பிய படி அசைக்கலாம், கைவிடலாம் என்ற தத்துவம் எரித்திரியாவிற்கு பொருந்தாது. ஏமாற்றப்பட்டுகைவிடப்பட்டு, பயங்கரப்படுத்தப்பட்டு, பட்டினியாக்கப்படுத்தப்பட்டு குண்டு வீசப்பட்டு, உலகிலுள்ள சர்வதேச உதவி ஸ்தாபனங்களால் கைவிடப்பட்டு [பிரித்தானியாவிலுள்ள தேவையானவருக்கு உதவிச்சங்கம் தவிர] போராடிய எரித்திரியா மக்கள் தமது தாய் நாட்டின் 95% யை மீட்டதுடன் உலகின் மிகமுக்கியமான கடற்கரையின் 600 மைல்களை மீட்டுள்ளனர். செங்கடலினூடாகவே மேற்கு நாடுகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் யாவும் செல்கின்றன.

வியட்னாம் போரை விட கடுமையான காலத்தில் 16½ வருடங்களாக மக்கள் போராடியும் சகல மக்களும் பகிர்ந்து தனிமையில் அவர்கள் தன்னிறைமையிலான மனிதத்தன்மையுள்ள படிப்பறிவுள்ள தேசப்பொறுப்பை சகலரும் பகிர்ந்து கொள்ளும் விவசாய நிலங்களில் கைத்தொழில் வருவிக்கக்கூடிய ஒரு சமுதாயத்தை கட்டி வளர்த்துள்ளார்கள். அவர்கள் அராபிய மக்களின் சிறு பணவுதவியையும், சூடானின் கரைமார்க்க வசதியையும் மட்டும் பயன்படுத்தி இதனைச்சாதித்துள்ளனர். அவர்கள் பயன்படுத்தும் ஆயுதங்கள் வாகனங்கள், இயந்திரங்கள் உபகரணங்களில் பெரும்பாலானவை எத்தியோப்பியவிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன, அல்லது அவர்களுடைய திறமையால் மூன்றாவது உலகத்தில் இல்லாத அரங்க தயாரிப்பிடங்களில் தயாரிக்கப்பட்டுள்ளவை.

அவர்களுடைய மார்க்ஸிசம் கலந்த கொள்கையும் பல வருடங்களின் அனுபவங்களினால் காட்டிக்கொடுப்பாலும், உருவாக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் கல்வி கற்ற ஒரு ஆசிரியர் என்னிடம் நாங்கள் வலது சாரிகளோ, இடதுசாரிகளோ அல்ல இது உங்களுக்கே ஆச்சரியமாயிருக்கும். இது ஒரு ஐரோப்பிய சிந்தனை. இதனை எரித்திரியாவிற்கும் ஆபிரிக்காவிற்கும் உபயோகிக்க முடியாது. நாங்கள் எவ்வாறு இந்தப் பதங்களைப் பாவிக்கலாம். நாம் பல முறை காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளோம். கைவிடப்பட்டுள்ளோம். நாங்கள் நாங்களே எங்களுக்கு ஒரு அரசியல் கடன்களுமில்லை.

எரித்திரியா மக்கள் வேறு வழியில் தங்களுடைய சோசலிசமே தங்களுக்கு பொருத்தமான சோசலிசமென உணர்ந்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போராட்டம் ஒரு நோக்கு

ளனர். இதனுல் தான் அவர்களின் தலைமை மறைவாக உள்ளதுடன் பெரும் கலகலப்பு இல்லாமல் மாற்றங்களும் அடைந்துள்ளது. அவர்களுக்கு காஸ்ட்ரோ போன்ற தலைவர்கள் தேவைப் படாத படியால் அப் டிப்பட்ட தலைவர்கள் தேவையில்லை. சர்வதேசியத்திற்கு வெறும் குரல் மட்டும் கொடுக்கின்ருர்கள். இவர்களுடைய சுயநிர்ணய உரிமையை பற்றி பேசிய சோவியத் யூனியன் இன்று சந்தர்ப்பவாத போக்கை கடைப்பிடிக்கின்றது. எரித்திரிய விடுதலை இயக்க கொரில்லாக்களுக்கு ஆரம்ப பயிற்சி அளித்த கியூபர்கள் நெப்பாம் குண்டுகளைக்குண்டுகளை வீசும் எதியோப்பிய விமானங்களின் தளங்களை திருத்துகின்ருர்கள் செகுவேராவின் நிலை இப்படி?

குறிப்புகள் :-

1. எரித்திரியாவை எதியோப்பியா ஆக்கிரமித்துள்ளது.
2. எரித்திரிய விடுத்தலைப் போராட்டத்திற்கு ஆரம்பத்தில் ரஷ்யாவும், கியூபாவும் எதியோப்பியாவுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஆதரவு கொடுத்தது.
3. எதியோப்பியாவில் புரட்சிக்குப்பின்னர் ரஷ்யாவும், கியூபாவும். எதியோப்பியாவுக்கு ஆதரவு
4. வியட்னும், பிரான்சு, அமெரிக்காவுக்கு எதிராக 25 வருடங்கள் போராடி 1975-ல் இறுதி வெற்றியடைந்தது
5. இன்று எரித்திரியாவுக்கு பலஸ்தீன விடுதலை இயக்கமும், ஈராக்கும் ஆதரவு அளிக்கின்றது.
6. அண்மையில் இரு விடுதலை இயக்கங்களும் ஒன்று சேர்ந்துள்ளன.
7. எதியோப்பியா எரித்திரியாவை விட பன்மடங்கு ஜனத்தொகை கூடிய நாடு.

எழுதியவர்:- நியூ ஸ்ரேற்ஸ்மன் இதழில் 'ஜேசன் பில்கர்'

இவர்கள் யார் எரித்திரிய மத்திய கிழக்கும் ஆபிரிக்காவும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. கிழக்கில் செங்கடலாலும், வடக்கிலும் கிழக்கிலும் சூடானுலும் தெற்கில் எதியோப்பியாவும் சிபூட்டியினுலும் சூழப்பட்டுள்ளது. செமித்தியர்களை முன்னிருந்த நீக்ரோ மக்களுடன் ஒன்ருகிய அசுமிற் சமுதாயம் 7ம் நூற்ருண்டில் வீழ்ச்சியடைந்த பின்னர் இந்தப்பகுதி நிலப்பிரத்துவ மன்னராட்சிகளிற்கும், உயர்நிலை கிறீஸ்தவர்களுக்கும் அடிமைவியாபாரிகட்கும், இடைப்பட்ட போர்க்களமாக மாறியது அதன் பின்னர் துருக்கியராலும் ஈற்றில் இத்தாலியராலும் கைப்பற்றப்பட்டது. இத்தாலியர் ஏனைய ஏகாதிபத்தியவாதிகளைப்போலவே செயற்பட்டனர். அவர்கள் சுரண்டி ஒரு நாட்டை உருவாக்கினர். எரித்திரியா ஒரு இத்தாலிய பெயராம். தொழிற்சாலைகளைகட்டி நிலத்தைத்திரட்டி கட்டுப்படுத்தி படிப்பறிவை உருவாக்கி எல்லைகளையும் நிர்ணயித்தனர். 1941ல் இவர்கள் பிரிட்டிஷரால் வெளியேற்றப்பட்டனர்

இரு எரித்திரிய விடுதலை இயக்கங்களும் பிரிட்டிஷார் நயவஞ்சகர் எனக்காட்டினுலும் பிரிட்டிஷாரைப்பற்றிய நல்லபிப்பிராயங்கள் சில பகுதிகளில் இன்னமும் உலாவுகின்றது 1941ம் ஆண்டு முதல் 1950ம் ஆண்டு வரை பிரிட்டினின் மிகச்சிறந்த குடியேற்ற ஆட்சி அதிகாரிகள் எரித்திரியாவிற்கு சென்றனர். இவர்கள் முதிய எரித்திரிய கருத்தை மக்களால் முதன் முதல் எரித்திரிய மக்களின் சுதந்திரத்திற்கான கருத்தை ஏற்றுக்கொண்டவர்கள் எனப்பாராட்டப்படுகின்றனர் 2ம் உலக மகாயுத்தத்தின் பின் பிரிட்டிஷ் அரசாங்கமும் இரண்டு சர்வதேச கொமிசன்களும் எரித்திரியாவை என்ன செய்வது என்ற சிக்கலில் கஷ்டப்பட்டனர். 1952ம் ஆண்டு பிரிட்டன் எத்தியோப்பியாவுடன் சமஷ்டி முறையில் இணைக்கப்பட்ட சுயாதீனமான தனி எரித்திரியா என்ற ஐ நா. சபையின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

அமெரிக்கா அக்கட்டத்தில் எத்தியோப்பிய மன்னர் கெய்லி செலாஸியை எந்தக்காரணங்களுக்காக புதிய ஆட்சியாளர்களை ஆதரித்ததோ, அதேகாரணங்களுக்காக ஆதரித்தது. அமெரிக்காவுக்கு கிடைத்த பரிசு எரித்திரியா தலைநகர், அஸ்மராவிலுள்ள கக்னு (KEGNEW) தொடர்பு நிலையம். இன்று ரஷ்யாவுக்கு புதிய அரசாங்கத்தை ஆதரிப்பதால் கிடைத்த பரிசு எரித்திரியா செங்கடல் கரையோரத்திலுள்ள ஆழ்கடல் துறைமுகமாகிய மஸாவா ஆகும். அடிஸ் அபாவாவில் [எத்தியோப்பிய தலைநகர்] இருந்த தலைவர்களுக்கு மன்னராயிருந்தாலோ தற்போதைய புரட்சி அரசாங்கமாயிருந்தாலோ அவர்களுக்கு எரித்திரியா செங்கடலுககான ஒரு மார்க்கமாகவிருந்தது. அதாவது அவர்களது கருத்ததுப்படி தேவையற்ற மக்களால் நிரப்பப்பட்ட ஒரு முக்கியமான நிலப்பகுதி. எனவே அவர்களின் தீர்வு அதில் வாழும் மக்களைப் பூரணமாக அழிப்பதாகும்.

எரிட்டியாவிலிருந்து பிரிட்டிஷ் அதிகாரியாகிய சேர், கென்னடி திருவாக்கல் என்பவர் அண்மையில் டைம்ஸ் பத்திரிகையில் பின்வருமாறு எழுதியுள்ளார். சுதந்திரத்தை விரும்பும் முஸ்லிம்களாலும் எதியோப்பியாவுடன் ஒற்றுமை விரும்பும் கிறீஸ்தவர்களாலும் சரிசமனுக நிரப்பப்பட்ட ஒரு நாட்டுக்கு எதியோப்பியாவுடன் சமஷ்ட்டி ஆட்சி ஒரு பிழையான கருத்து எனக்கூறமுடியாது, என அவர் கூறியுள்ளார் எனினும் புதிதாக அமைக்கப்பட்ட எரித்திரிய பாராளுமன்றத்திற் கெதிரா மன்னன் கெயிலி செலாசி கையாண்ட ஊழல் பயமுறுத்தல் அச்சுறுத்தல் நடவடிக்கைகளால் பாராளுமன்றத்தின் ஆதரவுடன் எரித்திரியா 1962-ம் ஆண்டு முற்ருக சேர்க்கப்பட்டது. எரித்திரிய மக்கள் தங்களுடைய விடுதலைக்காக தாங்களே போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

உண்மையாக எரித்திரியாப்பியாவுடன் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எரித்திரியா பாராளுமன்றம் அதரித்து வாக்களிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கும் போது பார்வையாளர் பகுதியிலிருந்து எதியோப்பிய துப்பாக்கிகள் அங்கத்தவர்கள் மீது காட்டப்பட்டிருந்தது மன்னரின் படைகள் உடனடியாக ஆக்கிரமித்து முக்கிய மொழிகளான திரிகானிய, டைரே, மொழிகளைப்பாவிப்புக்கு தடை செய்தார்கள். முக்கியமான எரித்திரிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு ஆயிரக்கணக்கானோர் சிறையிடப்பட்டனர் விடுதலைப்போராட்டம் ஆரம்பமானது.

எதியோப்பிய குண்டுகள் இருசமய மக்களுக்கு மிடையில் வேற்றுமை காட்டாத படியால் விரைவில் கிறீஸ்தவர்களும் மன்னரோடு சேருவதை விடுத்து விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்து கொண்டனர். கிறீஸ்தவர்கள் இப்போது இரு விடுதலை இயக்கங்களிலும் முக்கியமாக உள்ளனர். இரு இயக்கங்களும் எரித்திரியா விடுதலை இயக்கம் (E.L F.) அதிலிருந்த பிரிந்த எரித்திரிய மக்கள் விடுதலை இயக்கமும் (E. P L, F.) ஆகும். ஒவ்வொரு இயக்கமும் தனக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதியில் செயற்பட்டாலும் இவற்றிற்கிடையில் ஏற்படும் மோதல்கள் எரித்திரியா போராட்டத்தில் ஒரு துக்ககரமான விடயமாகும் எ ம வி. இ (E. P. L. F ) கூடுதலாக மார்க்சிஸ்ட் எனவும் கருதப்பட்டாலும் எரித்திரிய மக்களின் ஒரு பிரச்சனை விடுதலைப் பிரச்சனை மட்டுமே. கடந்த ஏப்ரல் மாதம் இரு இயக்கங்களும் ஒற்றுமையான தலைமையை அறிவித்தன கடந்த. மாதம் பெயருட்டில் அவர்கள் எதியோப்பிய அரசாங்கத்தை நிபந்தனையற்று பேச்சு வார்த்தை நடத்துமாறு கூறினார்கள், இதற்கு எதியோப்பிய அளித்த பதில் பிரிவினைவாதிகள் பூரணமாக அழிக்கப்படுவார்கள், என்ற எச்சரிக்கையாகும்,

எரித்திரியாவுக்கு செல்வதே ஒரு சரித்திர பூர்வமான நிகழ்ச்சியாகும். செங்கடலில் உள்ள சூடான் துறைமுகத்திலிருந்து சூயாக்கினுக்கான 35 மைல் தூரத்தை நான் வாகனத்தில் கடந்தேன். இங்கு தெற்கில் மார்க்கத்தில் வீதி முற்றுப்பெற்று பாலைவனம் ஆரம்பமாகிறது. இங்கு 2 மணி அதிகாலையில் ஒரு வாகனத்தொகுதி வருவதாகக் கூறினார்கள். அவ்வாறு 4 பெரிய பியட் வாகனங்கள் (இன்னமும் எதியோபிப்பிய குறியீடுகளுடன்) வந்தன. அவை குவைத் நாட்டால் தரப்பட்ட ஆயுத மருந்துகளையும் உணவு பால் மா டின்களையும் கொண்டிருந்தன. எனது வாகனத்தின் சாரதி சுலைமான் என்ற பெயரைக் கொண்ட அமைதியாக இளைஞராகும். இவர் பகலில் சூரியனின் பாதையைக்கொண்டும் இரவில் உணவுகளை மட்டும் கொண்டே வாகனத்தினைச் செலுத்தினார் இடைக்கிடை சில நடைபாதைகள் இருந்தன- ஆனால் வீதியோ வரைபடமோ இருக்கவில்லை சாரதி சிறிதளவிலே உணவு குடிநீர் அருந்தினார், பகல் நேரத்தில் கிருமிகளும் நுளம்புகளும் ஓய்வு கொடுத்த சில மணித்தியாலங்களில் அவர் நித்திரை கொண்டார். முகம் பூராவும் மலேரியா வியர்வை படர்ந்திருந்தது. பல தடவைகளில் குறிப்பாக ஒரு தடவை மண்புயல் அடிக்கும் பொது உடலில் அதிர்வு ஆட்டத்தை தவிர்ப்பதற்கு பல முறை வாகனத்திற்கு அருகே மேலும் கீழும் நடந்தார். என்னுடைய மலேரியா தடுப்பு மருந்துகளை. மிகவும் ஆச்சரியத்துடன் பெற்றுக் கொண்டார். அவர் முன்பு ஒரு பொழுதும் இம்மருந்துகளைக் காணவில்லை. அவர் என்னையும் ஏனைய பயணிகளையும் கவனித்துக்கொண்ட முறை குறிப்பிடத்தக்கது. அவர் ஓய்வெடுக்காது விடினும் எங்களை ஓய்வெடுக்குமாறு வற்புறுத்தினார், எங்களை பற்றை நிழலில் இருத்தி அவரும் ஏனைய சாரதிகளும் பல தடவைகளில் வாகனங்களை மண் புயலிருந்து வேண்டி (ஒரே கூட்டமாக பாடிக்கொண்டு) எடுத்தனர்.

அவர் எம்மை தெற்கே அஸ்மார வீதி மட்டும் (5 இரவுகள் பயங்கரமான பயணம்) அழைத்துச் சென்று திரும்பி அதே பாதையில் சூடான் துறைமுகம் மட்டும் அழைத்துச் செல்ல வேண்டும். ஆற்றுப்படுக்கைகளை பருவ கால மழைகள் நிரப்பு மட்டும் இப்பயணம் தொடரும் நான் முன்பு ஒருபொழுதும் சந்தித்திராதவாறு மிகவும் சந்தோசத்துடனும், மகிழ்ச்சி நட்புறவுடனும் இப்பயணத்தை செய்தார்கள். நாங்கள் பிரியும் போது தான் அவருடைய கழுத்தில் ஒரு குண்டுத்துண்டு புதைந்து இருப்பதாக அறிந்தேன். என்னைப் பொறுத்த மட்டில் இச்சாரதி எரித்திரியாவின் திடசங்கற் பத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

எங்களோடு ஒரு குடும்பம் போல் தோற்றமளித்த சிலரும் பயணம் செய்தார்கள். உண்மையில் அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் குடும்பங்களில் அழிந்து போனவர்கள் போக மிகுதியாகவுள்ள ஒரேயொரு நபராகும். ஓர் இளம் பெண் சூடான்துறைமுகத்திற்கு ஆஸ்பத்திரி சிக்சைக்கு அனுப்பப்பட்டவர். நான் அவரிடம் ''ஏன் திரும்பி வருகிறீர்கள்'' என வினவினேன். அதற்கு அவர் ''வேறென்னத்திற்கு போராடுவதற்கே'' எனக் கூறினார் அவருடைய தாய் தந்தையர் எதியோப்பிய ரஷ்யா போர்க்கப்பல் மஸாலா துறைமுகத்தை தாக்கிய பொழுது கொல்லப்பட்டனர். அவருடைய சகோதரி அந்தத் துறைமுகத்திலிந்து 40,000 மக்கள் அப்புறப்படுத்தப்பட்ட போது தற்செயலாக இறந்தவர், எரித்திரியா மக்களில் $1\frac{1}{4}$ பங்கு அகதிகள், வரும் மலேரியாவால் பீடிக்கப்பட்டிருந்தார். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு குழந்தையாவது காசநோய் அல்லது ஏதாவது வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தது இந்தியாவிலிருந்து பிரித்தானியரால் கொண்டு வந்து நடாத்தப்பட்ட மார்சேயென் கிளையினால் உருவான ஒரு பெரிய மரத்தில் கீழுள்ள ஒரு பாழடைந்த கட்டிடத்தில் உள்ள ஒரு சூடானிய சார்ஜன்ட் கொண்டுள்ள ஒலு பொலிஸ் கட்டடத்தில் எரித்திரியாவின் எல்லை ஆரம்பமாகிறது. இங்கு இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஆற்றின் இக்கரையிலும் மறுகரையிலும் இருந்த பிரிட்டன் இத்தாலிய தளபதிகள் மாறிமாறி ஒன்றுக உண்பதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதுமாக கழிந்தன' எதியோப்பிய ராணுவத்தனம் கைப்பற்பப்பட்ட பிரிவு கடந்த வருடம் இத்தாலிய கலால் அறையில் இளம் நீலநிற எரித்திரிய கொடி பறக்கவிடப்பட்டுள்ளது கியூபா தலையீடு இல்லாது விடின் இச்சம்பவத்திற்கு பின்பு அடுத்தடுத்து நடந்த வெற்றிகள் ஈற்றில் தலைநகரான அஸ்மராவின் வீழ்ச்சியில் முடிந்திருக்கும்,

எல்லையிலிருந்து பார்க்கும் பொழுது நிலப்பரப்பு அழகானதும் கவர்ச்சிகரமாகவும் உள்ளது, உருவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போன்று மலைகள் உள்ளன. கையினுல் அமைக்கப்பட்டு இமயமலைகளைச்சுற்றியுள்ள வீதிகளில் நாம் விமானக் குண்டு வீச்சுக் காரணமாக இரவில் பயணம் செய்தோம். வீதியின் இரு பக்கத்திலும் வட்டம் போன்று நியமிக்கப்பட்டகற்கள் அடுக்கப்பட்டிருந்தன. நாம் எரித்திரியாவின் மேலும் செல்ல இந்த வட்டங்கள் அதிகரித்தன. இவை யாவும் புதை குழிகள், விமானக்குண்டு வீச்சால் கொல்லப்பட்ட நாடோடி மனிதர்களையும் இடையர்களையும் ஏன் முழுக்கிராம மக்களை இப்புதை குழிகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் இப்புதை குழிகள் பட்டினியாலும் வியாதியாலும் இறந்த மனிதர்களை கொண்டுள்ளது. சாக்கேல் பாலை வனத்தினுல் ஏற்பட்ட வரட்சி காரணமாக எதியோப்பியாவில் ஏற்பட்ட வரட்சி எரித்திரியாவை பெருமளவு பாதித்துள்ளது. இங்கு இறப்பு வீதம் உயர்வாக உள்ளது. அடிஸ் அபாவிலிருந்து ஒரு உதவியாவது எரித்திரியா மக்களுக்குக் கிடைக்கவில்லை.

முதலில் எரித்திரியாவை அடையும் பொழுது மக்கள் இல்லை என அதிர்ச்சி ஏற்படும். பின்பு இரவில் நிலத்திற்கு கீழேயிருந்து மக்கள் டோச் விளக்குகளை காட்டிக்கொண்டு வந்து சாரதிகளை அணைத்துக் கொண்டனர். உடனடியாக ஒரு ஜெனரெட்டர் வேலை செய்ய ஆரம்பித்தது. என்ணெய் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு விளக்குகள் மரங்களில் தொங்கவிடப்பட்டன- மெக்கனிக்குகள் கூட்டமாக வாகனங்களைச் சுற்றி வளைந்தனர்; விளக்கு வெச்சங்கள் சீராக வெட்டப்பட்டுள்ள தாவரங்களை எடுத்து காட்டியது அன்று காலையில் தான் அந்தப்பகுதியில் நெப்பாம் குண்டு வீசப்பட்டது இரத்தப்பந்துகள் போன்றிருந்தன என மக்கள் கூறினர். இரு இடையரும் ஒரு குழந்தையும் கொல்லப்பட்டிருந்தன. அவர்களுடைய சடலங்கள் டார்புல்லினுல் போர்க்கப்பட்டு ஒரு கூடாரத்தில்பின் அகற்றுவதற்காக வைக்கப்பட்டிருந்து.

எரித்திரியா இரவில் இயற்கும் நாடாகும். கொரில்லாக்கள் தமது தாக்குதல்களை மிகவும் அதிகாலையில் நடத்தி இறந்தவர்களையும் காயம் அடைந்தவர்களையும் சூரிய ஒளி உதயத்தில் விமானங்கள் வரமுன்னரே அகற்றி விடுகின்றர் குழந்தைகள் முன்னிரவில் பாடசாலைக்கு செல்கின்றனர் விவசாயிகள் தமது பயிர்களில் சந்திர வெளிச்சத்தில் வேலை செய்தனர் வடக்கில் ஒரு முற்ருன கைத்தொழில் நகரம் கீழே உள்ளது. சுரங்கங்களின் முடிவுப்புள்ளிகளில் தொழிற்சாலைகளும் தயாரிப்பு இடங்களும் உள்ளன. இவை கைப்பற்றப்பட்ட எதியோப்பிய பரச்சூட்டுகளால் மூடப்பட்டு கைப்பற்றப்பட்ட போர்மிங்காவில் தயாரிக்கப்பட்ட ஜெனரேட்டர்களால் இயக்கப்படுகின்றது.

இங்கு விவசாயிகளினதும் நாடோடி மக்களினதும் குழந்தைகளாகிய இளைஞர்களும் யுவதிகளும் சுய கல்வி பெற்று ஒரு சிறிய அளவில் கைத்தொழில் புரட்சியை உருவாக்கியுள்ளனர். துப்பாக்கித் தொழிற்சாலையில் பிரேன் கைத்துப்பாக்கி தொடக்கம் சிலாசினிசேரல் ரைபிள் பீரங்கிகள் வரை சகலவும் முற்ருக கழற்றப்பட்டு ஆராயப்பட்டு பிரதிகள் தயாரிக்கப்படுகின்றன, புத்தகக் குறிப்புகள்எ ழுதப்படுகின்றன. உதாராணமாக சிலாசினி சேரல் ரைபிள்ஸ் எளிதில் கையாளக்கூடியதாகவும் இலகுவானதாகவும் மாற்றியமைக்கப்படுகின்றன. இயந்திர உதவியாளர் ஒருவர் அது இப்பொழுது உண்மையாகவே ஒரு எரித்திரியா தயாரிப்பு எனக் கூறினுர்

உலோகத்தொழிற்சாலையில் சேதமில்லால் விழுந்த ரஷ்ய மிக் — 21 ஒன்று (சண்டை வீச்சு விமானம்) துவக்குகளாகவும் வாளகளாவும் அடுப்புக்களாவும் கலப்பைகளாகவும் குளிரி உபரகரணங்களாவும் கதிர் இயந்திரங்களாவும் இயந்திர உபகரணங்களாவும் மாற்றப்பட்டுள்ளது. மின் உபகரண தொழிற்சாலையில் சன்யோக் கிட்டார்ச்சி ரேடியோக்களின் பிரதிகள் தயாரிக்கப்படுகின்றன மரத் தொழிற்சாலையில் பாடசாலை மேசைகள் கதிரைகள் தயாரிக்கப்பட்டு தொடர்ச்சியாக அடுக்கப்பட்டுள்ளன. நெசவுத்தொழிற்சாலையில் காயமடைந்த போர் வீரர்கள் அஸ்மராவில் கைப்பற்றப்பட்டசிங்கர் இயந்திரங்களின் அருகே அமர்ந்து குழந்தைகளுக்கு அணிஉடுப்புக்களையும் விரைவில் அவர்கள் எதிர்பார்க்கும் சுதந்திரத் தினத்தில் அலங்கரிக்கும் கொடிகளையும் தயாரிக்கின்றன,

நாங்கள் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டத்தை அனுட்டிப்பதில்லை இறக்கும் அல்லது கொல்லப்படுகின்ற குழந்தைகளுக்கும் மக்களுக்கும் ஈடாக எமக்கு குழந்தைகள் தேவை எனவே நாம் பெரிய குடும்பங்களை விரும்புகின்ருேம் இதுவே உண்மைநிலை அன்று ஒரு இளைஞனே யுவதியோ எழுதவும் வாசிக்கவும் தான் ஏன் விடுதலைக்காக இறக்க வேண்டும் எனக்கற்ற பின்னரே கொரில்லாவில் சேருக்கின்ருன் இவ்வாறு காங்கப் பாடசாலையில் உள்ள ஒரு இளம் ஆசிரியை கூறினுர் இங்கு ஒரே ஒரு கொப்பியும் 2 பென்சில்களும் 50 பிள்ளைகள் உள்ள வகுப்பில் உபயோகிப்படுகின்றது சுண்ணும்புக்கட்டியையோ விளையாட்டுப் பொருட்களையோ வர்ணநிறச்சோக்குகளையோ குழந்தைகள் கண்டதில்லை பணம் பயன்படுத்தப்படுவதல்லை.

ஒவ்வொரு பாடசாலையும் ஒரு அனதைமுகாமாகும். இங்கு உடல்நிலை மனநிலை குறைந்த குழந்தைகள் ஏனைய குழந்தைகளுடன் கலந்துள்ளனர் குழந்தைகள் மிகவும் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புடனும் நடக்கின்றனர்; அவர்களுக்கு பல விசித்திரமான ஆனல் தேவையான விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன. உதாரணமாக திறந்த வெளியில் விமானத்தாக்குதலின் போது எல்லாக் குழந்தைகளும் நிலத்தில் ஒரே நிரையில் படுக்க வேண்டும் எனக்கற்பிக்கப்படுகின்றது. இதனுல் நிரையிலுள்ள சில குழந்தைகள் தாக்குதலுக்குள்ளாகின்றனர் 14 வயதை அடைந்ததும் அவர்கள் போர்வீரர்களாச் சேர்க்கப்படுகிருர்கள் இவர்களில் அரைப்பகுதிக்குக் குறைவானவர்கள் காயமடையாமலோ இறக்காமலோ தப்புகின்றனர். எரித்திரியாவின் இன்றைய வீரர்கள் யாவரும் போர் தொடங்கிய பின்னரே பிறந்துள்ளனர்.

எரித்திரியர்கள் எதியோப்பியர்கள், தங்கள் ரஷ்யடாங்கிகளோ, நுண்டுளைக்குண்டுகளோ, கியூபா ஆலோசகர்களோ, தம்மை பின்வாங்கச் செய்ய முடியாது எனத் திடமாக கூறுகிருர்கள் அவர்கள் கூறுவது சரியாக இருக்கலாம். நம்பிக்கை இழந்த பழைய முறையான எதியோப்பிராணுவம் மலைகளில் நீண்டகாலப் போராட்டம் நடத்த முடியாது. எனினும் எரித்திரியர்களுக்கு தன்னம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆயுதங்களில் குறைவில்லாவிடினும் போராட்டம் மிகவும் கடுமையானதென ஏற்றுக்கொள்கிருர்கள்.

1973 – 1974 ஆண்டு கடும் வரட்சி எரித்திரியர்களுக்கு பெரும் கவலையை கொடுத்தது ஒரு பயிர் செய்கை நாசமானதால் பலர் பட்டினியால் இறக்க வேண்டியிருந்தது. கிணறுகள் 100 அடி ஆழம் வரை தோண்டப்பட்டு வரட்சியுடையதாய் உள்ளது. அழியும் வயல்களின் ஊடாக மண் இடப்பெயர்ச்சியும் உயிரினங்களின் அழிவும் வரப்போகும் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்றன. தாழ்ந்த பிரதேசங்களில் மிகவும் கவனமாக நடப்பட்ட பேரீச்சம்பழ மரங்களும் அழிந்துள்ளன. பல தாவரப்பகுதிகள் விமானங்களிலிருந்து நச்சு வாயு பொழியப்பட்டு அழிக்சப்பட்டுள்ளன.

மறுபக்கத்தில் காயமடைந்தவர்களினதும் சுகவீனமுற்றவர்களினதும் நிலைமை மோசமாயுள்ளது அடிப்படை மருந்து கொடுக்கப்பட வேண்டும். நான் பல போர்களைப் பார்த்துள்ளேன். ஆனல் இவ்வளவு குறைவான பொருட்கள் உடன் இயங்கும் நடைபாதை 'ஆஸ்பத்திரிகளை' நான் காணவில்லை. ஒரு ஆஸ்பத்திரியில் முதலுதவிப் பொருட்கள் முதலாய் இல்லை. அரைப்போத்தல் இரத்தம் மட்டும் உண்டு வெளியே பாவிக்கப்பட்ட காணத்துணிகள் சமையல் பாத்திரங்களில் போட்டு சூடாக்கப்பட்டு மீண்டும் குழந்தைகளின் மென்மையான கைகளால் மெதுவாக காயமடைந்தவர்களுக்கு கட்டப்படுகின்றன.

இந்த ஆஸ்பத்திரிகள் முழுவதும் அசுத்தமாயுள்ளன. பாதைகள் நெடுக குப்பையும கூழமும் நிரம்பி வழிகின்றன. தொற்று நோய்கள் பரவுவதால் காயமடைந்தவர்களில் பலர் மரணமடைந்துள்ளனர். எரித்திரியர்களின் 35 லட்சம் மக்களில் 3 அறுவை நிபுணர்களும், 13 வைத்தியர்களும், உள்ளனர். அவர்கள் இன்று ஒரு உபகரணங்களும் இல்லாமல் மருந்துகள் பற்ருக்குறையுடன் சிகிச்சை அளிக்கின்றனர்.

நான் ஒரு இளம் வைத்தியரின் அருகில் நிற்கும் பொழுது அவர் ஒரே ஒரு மருந்துப்புட்டியை வைத்துக்கொண்டு அதைக்குண்டு வீச்சால் காயமடைந்த ஒரு இளைஞனுக்கு கொடுப்பதா, அல்லது காசநோயால் சரீரபேயில்லாத குழந்தைகளுக்கு கொடுப்பதா, எனச் சிந்தித்துக்கொண்டிருந்தார். இளைஞருக்கு உயிர் தப்பக்கூடிய சாத்தியக்கூறு கூட இருந்தமையால் ஈற்றில் அவருக்கே மருந்து கொடுக்கப்பட்டது.

இப்பொழுது மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவின் ஊடுருவல் ஆபிரிக்காவில் அதிகரிப்பது பற்றி கலவரப்படுவதால் எரித்திரியா பற்றி அடிக்கடிபேசிக்கொள்கின்றனர். பிரிட்டிஷ் வெளி நாட்டமைச்சர் கலாநிதி டேவிட் ஒவன் நைஜீரியாவில் ஜனதிபதி காட்டர் நிகழ்த்திய உரையை அடுத்து அண்மையில் ரஷ்யர்களையும், கியூபர்களையும் எதியோப்பியர்களையும், கடுமையாகத் தாக்கினர். இவ்வளவு கூடுதலாக பேசியும் நடைமுறையில் பார்த்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் உதவியும் வழங்கவில்லை. கடந்த மாதம் வெளிநாட்டமைச்சு அங்கீகரிக்கப்படாத நாடுகளுக்கு அவசர உதவி வழங்குவது இல்லை. எனக்கருத்துத் தெரிவிதுள்ளது. வெளிநாடுகள் உதவி அமைச்சர் ஜடித் கார்ட் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக பணவுதவி அளிப்பதாக வாக்களித்துள்ளார். பண உதவி ஏறக்குறைய 1,50,000 பவுண் ஆகும்.

நான் மீண்டும் சூடான் துறைமுகத்திற்கு திரும்பி வந்து அங்கிருந்து காட்டுமிற்கு விமானத்தில் பறந்து சென்றேன். றிஸ்டன் ஒட்டலில்' வெளிநாட்டு வர்த்தகப்பிரதிநிதிகள் தங்கியிருந்தனர். அவர்களில் பிரித்தானிய விமானவெளியிலிருந்து வந்த வர்த்தகர்களும் இருந்தனர். இவர்கள் சூடானிய அராசாங்கத்திற்கு ஒரு முழு ஏவுகணைத் தொகுதியை விற்க முயற்சி செய்கின்றனர். இந்த வருடம் பிரிட்டிஷ் அரசாங்கம் மூன்ருவது உலக நாடுகளுக்கு 10 கோடி பவுண் பெறுமான ஆயுத உபகரணங்களை ஏற்றுமதி செய்கின்றது இவற்றில் பெரும்பாலான உபகரணங்கள் அங்கீகரிக்கப்பட்ட சர்வாதிகார நாடுகளான ஈரான் போன்றவற்றிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதே நேரத்தில் எரித்திரியாவில் மருந்துகள் இல்லாமல் அறுவைச் சிகிச்சை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. ★

## விடுதலைப் பாதையில் தமிழர் விடு...

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வரலாற்றுப் பாசத்தை பூர்த்தியாக்கி விட்டது. விடுதலைப் பாதையில் தமிழினத்தைத் தீவிரமாக இட்டுச்செல்ல இளைஞர்களுக்கு அதை வழிவிடச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தந்தை செல்வா ஏற்படுத்திய இன உணர்விலும் ஒற்றுமையிலும் பிளவுகள் ஏற்பட ஆரம்பித்து விடும். இப்பொழுதே வெடிப்புகள் ஏற்படுவதை நாம் காணமுடிகிறது

இனிமேல் தமிழின விடுதலை வரலாற்றின் கதாநாயகர்களாக தமிழ் மூலம் கல்விகற்ற உழைக்கும் மக்களின் வாரிசுகளான இளைஞர்களும் யுவதிகளும் தான் அமைய முடியும். ஐந்து நாடுதா, ஐந்து நகர்தா, ஐந்து வீடுதா என்று தூது போய் முடிந்து விட்டது. மாவட்ட சபைப் பிரச்சனையுடன் இறுதிப் போர்க்களத் தூதும் முடிந்து ''இறப்பின் மத்தியில் தான் உயிர்ப்பு நிலைக்கிறது'' என்ருர் காந்தியடிகள் நூறு நெல் மணி விளைய வேண்டுமானல் ஒரு நெல் மணி தன்னை அழித்துத்தான் ஆக வேண்டும். உரிமைப்போராட்டத்தில் உயிர்ச்சேதத்தை உற்றம் சுற்றத்தைப் பார்க்க முடியாது என்று ஒரு கீதையையே உபதேசித்தார் கிருஷ்ண பரமாத்மா.

''தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ''

என்று சுதந்திரப் பயிரைப் பற்றிக்குறிப்பிட்டான் பாரதி, சுதந்திரமென்பது சுக்குமிளகல்ல கடையில் வேசாக வாங்குவதற்கு என்று தந்தை செல்வா குறிப்பிட்டார், எனவே சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்த தியாகங்களைச் செய்யத் தயாராக இல்லாத ஆங்கிலக்கல்வி கற்ற உயரதர மத்திய வகுப்புத்தலைமையை உதறி விட்டு தமிழ் மூலம் கல்விகற்ற தியாகங்களைப் புரியத்தயாராகவுள்ள உண்மை உழைக்கும் மக்களின் வாரிசுகளான இளைஞர்களை முன் வைத்து தமிழர் விடுதலைப் போராட்டத்தைத் தொடர தமிழ் மக்கள் முன்வர வேண்டும். உழைக்கும் மக்களின் உண்மையான தலைமையிலான ஒரு சோசலிஷ தமிழ் ஈழத்தை அமைப்பதன் மூலம் தான் இன விடுதலையை மாத்திரமல்ல சமூக, பொருளாதார விடுதலையையும் பெற்று பூரண விடுதலையை அடைய முடியும் என்பதை அவர்கள் உணர்ந்து செயலாற்ற வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விஞ்ஞான ரீதியிலான சோஷலிஸம்

— சாராங்கன் —

சோஷலிஸம் என்றவார்த்தைக்கு இப்போது ஒரு தனி மவுசு ஏற்பட்டுள்ளது. எல்லோரும் தங்களை ஏதோ ஒரு விதத்தில் சோஷலிஸ்டுகள் என்று கூறிக் கொள்ளுகிறார்கள். இலங்கைத் தீவிலும் சோஷலிஸ ஜனநாயகம், ஜனநாயக சோஷலிஷம் என்று பலவகையான சோஷலிஸங்கள் சந்தைக்கு வந்துள்ளன. பாசிசத்தைக் கட்டவிழ்த்து விட்ட ஹிட்லர் கூட தம்முடைய கட்சியைத் தேசிய சோஷலிஸ்ட் கட்சி எனக் குறிப்பிட்டார். ஆகவே எது உண்மையான சோஷலிஸம் என்பதை மக்கள் இனம் கண்டு கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பல நூற்றுண்டு காலமாக ஒடுக்கப்பட்ட மக்கள் தமது வறுமை நசுங்கல் என்பவற்றின் மத்தியில் ஒடுக்கப்பட்டோருக்கு வாழ்வு அளிக்கக்கூடிய ஒரு சமுதாயத்தைப்பற்றிக் கனவு கண்டு வந்தார்கள். இது அக்காலத்தில் மக்கள் தலைவர்கள் அறிஞர்கள் கருத்துக்களிலிருந்து புலனுகின்றது. ஆனுல் இக் கனவை எப்படி நனவாக்குவது என்று அறியாதிருந்தார்கள் பல சந்தர்ப்பங்களில் இக் கனவு நனவாக முடியும் என்ற நம்பிக்கை குன்றியவர்களாக இருந்தார்கள்.

மத்திய காலத்தில் குடியானவர் புரட்சிகளுக்குத் தலைமை தாங்கியவர் பலர் பொதுச்சொத்து முறையைப் புகுத்த வேண்டு மெனவும் சிறப்புரிமைகளை (சமுதாயத்தில் ஒரு சில பகுதியினருக்கு மாத்திரமுரிய) ஒழிக்க வேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்தார்கள். இவர்களில் வட இத்தாலியைச் சேர்ந்த பிரா டொல்சினு (Fra Dolcino என்பவரும் ஒருவராவர். 1304-07க்கு மிடையில் நடந்த விவசாயிகள் புரட்சிக்கு இவர் தலைமை தாங்கினுர். 19ம்-நூற்றுண்டில் ஜேர்மன்பிரதேசத்தில் விவசாயிகள் புரட்சிக்குத் தலைமை தாங்கிய தோமஸ்முன்ஸரர் என்பவர் மக்களுக்கெதிரான அரசியல் அதிகாரம் வர்க்க பேதம் தனிச்சொத்துரிமை முதலியன அற்ற ஒரு சமுதாய முறையே உருவாக்க வேண்டுமென்று விரும்பினுர்.

ஆனுல் மக்களுடையே அபிலாசைகள் அவர்களுடைய தலைவரின் கருத்துக்கள் நடை முறையில் நிறைவேறவில்லை ஏனெனில் இவ்வபிலாசைகளை நனவாக்க இக்கருத்துகளை நிறைவேற்ற ஒரு திட்டவட்டமான முறை அவர்களிடம் இருக்கவில்லை இவ்விதமான ஒரு திட்டவட்டமான முறை உருவாகக் கூடிய சூழ் நிலை இருக்கவில்லை. இதனுல் தனிப்பட்ட சொத்துரிமையின் கொடுமுடியான முதலாண்மை முறை நிலப்பிரபுத்துவ முறையைத் தொடர்ந்து ஆதிக்கம் பெற்றது.

மானிய முறை அழிந்து முதலான்மை முறை வளரத் தொடங்கிய காலப்பகுதியில் அறிஞர்கள் சிலர் சுரண்டல் முறையிலும் ஒடுக்கல் முறையிலும் அமைந்த முதலான்மை முறையைக் கண்டித்து இதற்கெதிராக சமத்துவ சகோதரத்துவ அடிப்படையிலான ஒரு வாழ்க்கை முறை அமைய வேண்டுமெனும் தம் அவாவினை வெளிப்படுத்தினுர்கள் இவர்கள் கற்பனை உலக சோஷலிஸ்ட்கள் (Utopian) என பின்னர் அழைக்கப்பட்டனர் முதலாண்மைச் சமுதாய அமைப்பு சுரண்டல் அடிப்படையிலான ஒரு சமுதாய அமைப்பு என இவர்கள் வலியுறுத்தினர் இதற்கு எதிராக சமத்துவ அடிப்படையிலான ஒரு சமுதாய அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென இவர்கள் எடுத்துக்காட்டினர். ஆனுல் இம் முறையைக் கொண்டுவரச் சரியான வழியை இவர்கள் எடுத்துக்காட்டவில்லை. பிரான்சைச் சேர்ந்த செயினற்சைமன் (1760-1825) சாள்ஸ் பவுரியார் என்பவர்கள் இவர்களில் முக்கியமானவர்களாகும் இவர்கள் சோஷலிஸ அடிப்படையிலான ஒரு சமுதாயத்தை சீர்திருத்தங்கள் மூலம் கொண்டு வர முடியும் என்று நம்பினர் முதாளித்துவத்திற்கெதிராகத் தொழிலாளிகள் தனிப்பட்ட பொருளாதார அமைப்புக்களை உருவாக்கி வளர்ப்பதன் மூலம் சோஷசலிஸ அடிப்படையிலான சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும் என்று கருதினர். இவர்கள் மனித வரலாற்றின் ஓட்டத்தினை, அதன் அடிப்படையில், பிறந்த முழு உலக அடிப்படையிலான பொருளாதார விதிகளை உணர்ந்து கொள்ளாமையே சீர்திருத்தங்கள் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையைக் கொள்ளக் காரணமாயிற்று.

பிரான்சிய உட்டோப்பிய சோஷலிஸ்டுக்களின் கருத்துக்களாலும் சுய சிந்தனையினுலும் உந்தப்பட்ட ரூபெட் ஓவன் (1771-1858) சோஷலிஸ அடிப்படையிலான திட்டங்கள் பலவற்றைத் தம் காலத்து ஐரோப்பிய ஆட்சியாளருக்கு (முதற்தர பிற்போக்கு வாதியான சார் முதலாம் நீக்கிலஸ் உட்பட) சிபாரிசு செய்தார். சோஷலிஸ அடிப்படையிலான தொழிலாளர் குடியேற்றங்களை அமெரிக்காவில் உருவாக்கி புதிய சமுதாய முறையை ஏற்படுத்த முற்பட்டார். ஆனுல் இவரது முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. பிரான்சிய கற்பனை உலக சோஷலிஸ்டுகளைப் போலவே இவர் தொழிலாளர்களின் வர்க்கப்போராட்டம் சமுக மாற்றங்களைக் கொண்டு வர அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றுவதன் அவசியம் தொழிலாளரை அரசியல் அணியில் ஒன்று திரட்டல் என்பவற்றின் முக்கியத்துவத்தை உணரவில்லை.

இத் நிலையில் பிரான்சிய உட்டோப்பிய சோஷலிஸத்தையும் ஜேர்மனிய கெகேலியன் சித்தாந்தத்தையும் (Hegelian Philosophy) ஆங்கிலேய அரசியல் பொருளாதாரத்தையும் (Political economy) தொடுவாயாகா கொண்டு உண்மை அடிப்படையிலான ஒரு விஞ்ஞான ரீதியிலான சோஷலிஸ சித்தாந்தத்தை கார்ல் மார்க்ஸ் உருவாக்கினுர். 1848ல் மார்க்சும் அவரது நண்பன் எஞ்சல்சும் வெளிப்படுத்திய பொது உடமைப் பிரகடனம் விஞ்ஞான ரீதிலான சோஷலிஸ சித்தாந்தத்தை உலகிற்கு அறிமுகப் படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விஞ்ஞான ரீதியிலான சிந்தாந்தமென்னும் போது ஆராய்ந்து பார்க்கக் கூடியதான அது தொடர்பான கேள்விகளுக்கு ஆதார பூர்வமான பதில் அளிக்கக்கூடியதான நடைமுறையில் அமுல்படுத்தக்கூடியதான ஒரு சிந்தாந்தத்தை குறிக்கும்.

இச் சிந்தாந்தம் தொடர்ந்து நடைமுறையில் லெனினினால் வளர்க்கப்பட்ட மார்க்சிய லெனினிச சித்தாந்தமென உருவாகியது மாவோ சேதுங் சேகுவேரா என்போர் இச் சித்தாந்தத்தைத் தம் பகுதிகளின் நிலைமைக்கேற்ற முறையில் கடைப்பிடித்து சோஷலிஸ புரட்சியையும் சோஷலிஸ சமுதாயத்தையும் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டு இச் சித்தாந்தத்தில் மேலும் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

இவ் விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்தின் முக்கிய தன்மைகள் யாவை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் விஞ்ஞான ரீதியான சோஷலிசம் சமுதாய வரலாற்றின் ஓட்டத்திற்குச் சரியான விளக்கமளிக்கிறது இது வர்க்கப் போராட்டமே வரலாற்றின் உந்து சக்தியாக விளங்குகிறது என்பதைக் காட்டுகிறது. ஆளும் வர்க்கத்தினர் தம் ஆதிக்கத்தைத் தாமாகவே விட்டுக் கொடுக்க மாட்டார்கள் புரட்சி நடவடிக்கை மூலம் அவர்களுடைய ஆதிக்கம் முறியடிக்கப்பட வேண்டும். புரட்சி மூலம் உழைக்கும் மக்களின் சர்வாதிகாரத்தை முதலில் ஏற்படுத்த வேண்டும்.

இவ்வதிகாரத்தின் துணைகொண்டு சமூகத்தின் பிற்போக்குச் சக்திகள் முறியடிக்கப்பட்டு சோஷலிஸ சமுதாயம் கட்டி எழுப்பப்பட வேண்டும், சீர்திருத்தத்தின் மூலமோ வேறு வழிகளிலோ இது நடைபெற முடியாது சொத்து சமூகசொத்தாகவே அமைய வேண்டும். (சொத்து என்னும் போது நுகர் பொருள்களையல்ல உற்பத்திச் சாதனங்களையே அது கருதும் இது பகிரங்க சொத்தாகவும் (Public property) கூட்டுறவுச் சொத்தாகவும் அமையும். தனி உடமைக்கு இங்கு இடம் கிடையாது. என்ற கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

மார்க்சினால் உருவாக்கப்பட்டு லெனின், மாவோ, செகுவேரா முதலியவர்களால் வளர்க்கப்பட்ட இச் சோஷலிஸ சித்தாந்தமானது எல்லா நாடுகளிலும் சோஷலிசப் புரட்சி ஒரே வகையில் அமையுமெனக் கொள்ளவில்லை வரலாற்று அனுபவம் ஒரு சோசலிசப் புரட்சி ஒரு மத்தியதர ஜனநாயக புரட்சியிலிருந்தோ (உ+ம் ரூசியா அல்லது ஒடுக்கப்படும் மக்களின் தேசிய விடுதலை இயக்கத்திலிருந்தோ (உ+ம் வியட்நாம் மொசாம்பிக்) அல்லது பாசிச எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப்போரிலிருந்தோ (உ+ம்) கிழக்கு ஐரோப்பியநாடுகள் கியூபா, கம்போடியா) அல்லது வேறு தனிப்பட் நிலைமைகளிலிருந்தோ (உ+ம் சீனு, ஆபுகானிஸ்தான்) உருவாக முடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

சோஷலிஸம் அல்லது சமூக உடமை உற்பத்திச் சாதனங்களின் சமூக உடமையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தகுதிக்கேற்ற உழைப்பையும் உழைப்புக்கேற்ற ஊதியத்தையும் அது குறிக்கிறது அங்குஉண்மை உழைப்புக்குத்தான் இடமளிக்கப்படும் கட்டுப்பாடற்ற (சுரண்டலுக்கு) பொருளாதாரமுறை வியாபார தந்திரங்கள் (Speculations) என்பவற்றிற்கு அங்கு இடமிருக்க முடியாது தனி உடமையும் சமூக உடமையும் பச்சை மண்ணும் சுட்ட மண்ணுமாகும் இரண்டும் ஒன்று சேரமுடியாது எனவே தனி உடமையும் சமூக உடமையும் சேர்ந்து ஒரு சோஷலிஸ சமுதாயம் அமைய முடியாது உழைக்கும் மக்களின் அரசியல் ஆதிக்கத்தின் கீழன்றி முதலாளித்துவ அரைமானிய அரை முதலாளித்துவ தலைமைகளின் கீழ் ஒரு சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டி யெழுப்ப முடியாது சீர்திருத்தத்தின் மூலமல்ல புரட்சியின் மூலமே ஒரு சோஷலிஸ அரசாங்கத்தை அமைத்து அதன் பின் சோஷலிஸ சமுதாயம் படிப்படியாகக் கட்டி எழுப்பப்படவேண்டும் தனி உடைமையும் சமூக உடமையும் சேர்ந்து ஒரு அமைப்பு உழைக்கும் மக்களுக்கு உண்மையான விடிவை ஏற்படுத்த முடியாது எனவே உழைக்கும் மக்கள் உண்மையான விடிவைக்கான சோஷலிஸ புரட்சியை ஏற்படுத்தி ஒரு உண்மையான சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

இலங்கைத்தீவில் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் வியட்நாம் மொசம் முதலிய நாடுகளைப் போல் தமிழ் ஈழத்திலும் சோஸப்புரட்சியின் கயாக அமையமுடியும் அப்போதுதான் இன ஒடுக்கலையும் அடக்குமுறையையும் ஆதரிக்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்கெதிராக சோஷலிஸ நாடுகளின் உதவி எமக்குக்கிட்டும் இனவிடுதலையின் பின் வங்காள தேசத்திற்கு நடந்துள்ள கதி நமக்கு ஏற்படுவதைக் தடுக்க முடியும்.

☆

"மனிதன்" வருட சந்தா ருபா 7,50 சதம்

( அஞ்சல் செலவு உட்பட )

12 இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் சந்தாப் பணத்தை அ. விமலதாசன் எனும் பெயரிற்கு

யாழ்ப்பாண அஞ்சல் நிலையத்தில் மாற்றக்கூடிய தபாற் கட்டளையாகவோ அன்றேல் காசுக் கட்டளையாகவோ அஞ்சல் பெட்டி 81-க்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் ஈழத்தில் அதிகரித்துவரும் அடக்குமுறைகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கரையோரப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் தாக்குதலும் ஆழ்கடலில் தொழிலாளர் தாக்கப்படுவதும் அவர்களுடைய மீன்கள் பலாத்காரமாகப் பறிக்கப்படுவதும் உபகரணங்கள் சேதப்படுத்தப்படுவதும் தமிழ் ஈழத்தில் நடக்கும் ஒரு சர்வ சாதாரண நிகழ்ச்சியாகும். வட ஈழத்தில் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகாத கிராமங்கள் கிடையாது என்றே சொல்லலாம். இது வரை காலமும் எமது கரையோர பகுதியில் தனது தாக்குதலை நடத்தி வந்த சிறீலங்கா படைகள் தற்பொழுது தமிழீழத்தின் மத்திய பகுதிகளிலும் தனது தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

இரண்டாவது வழியான அடக்கு முறை சிங்கள மக்களால் ஏற்படுத்தப்படுவது அதாவது தமிழ் ஈழம் சிறீலங்காவின் காலனித்துவ குடியேற்ற நாடாக விளங்கி வருகின்றமையும் மறுபக்கத்தில் தமிழீழம் சுரண்டப்படுகின்றமையும் அதன் விளைவாக ஏற்பட்ட நில அபகரிப்பும் சிங்களக் குடியேற்றமும் இன்னும் தெளிவாகக் கூறுவதானல் தமிழீழம் சிறீலங்காவின் பேரினவாதக் கொள்கைக்குப் பலியாகி வருகின்றமையும் அதன் விளைவுகளும் சிறீலங்கா படைகளின் அடக்கு முறைக்குக் துணை போகின்றன.

தமிழ் ஈழத்தில் முப்படைகளினதும் சிங்கள மக்களினதும் ஒருங்கு சேர்ந்த அடக்கு முறைக்கு உள்ளாகி வரும் பிரதேசங்கள் தமிழீழ எல்லைப் பிரதேசங்களான வவுனியா திருகோணமலை, கொக்கிளாய், போன்ற பகுதிகளாகும். 1977 ஆவணி ஒடுக்குதல்களும், 1978 சித்திரை கிளிவெட்டிப் பகுதிகளின் குழப்பங்களும் இதற்குச் சான்று பகருகின்றன திருமலை, பன்குளப்பகுதியில் ஆகாயப்படையினர் மக்களைத் தாக்குவதையும் மக்கள் நிலங்களை அபகரிப்பதையும் (உ-ம் மயான விவகாரம்) இடையூறுகளைக் கொடுப்பதையும் நாம் காணலாம்.

சிறீலங்காப்படைகள் தமிழ் ஈழத்தின் இளைஞர்களைச் சிறைப்பிடிப்பதும் சித்திரவதை செய்வதும், மாணவர்களை தொழிலாளர்களை, இளைஞர்களை ஆங்காங்கே தாக்குவதும் சிறீலங்காவின் அடக்கு முறையின் இன்னொரு வடிவம் ஆகும்.

தற்போது மக்கள் எந்நேரம் தாக்கப்படுவோமா சுட்டுக் கொல்லப்படுவோமோ, வீடுகள் உடைத்துக் கொள்ளையிடப்படுமோ, பெண்கள் எந்நேரம் தங்கள் மானம் பறிக்கப்படுமோ என்று எண்ணியவர்களாய் அச்சத்துடன் பாது காப்பற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு நிராயுத பாணிகளான தமிழீழ மக்கள் சிறீலங்காவின் ஆயுதபாணிப்படைகளின் அடக்கு முறைகளுக்கும் தாக்குதல்களுக்கும் அட்டூழியத்திற்கும் இலக்காகி வருவதற்குக் காரணம் தமிழ் ஈழம் சிறீலங்காவின் பிடியில் இருப்பதே ஆகும். சிறீலங்காவிடமிருந்து விடுதலை பெற்றால் தான் தமிழ் ஈழ மக்கள் அனுபவிக்கும் அடக்கு முறையைத் தீர்க்க முடியும். தமிழ் ஈழம் சிறீலங்காவிடம் அடிமைப்பட்டு இருப்பதே பிரச்சனையின் தோற்றுவாயாக உள்ளது. தமிழ் ஈழத்தவர் அனுபவிக்கும், எதிர்நோக்கும் நானுவித பிரச்சனைகளுக்கும் அதிலும் முக்கிய பிரச்சனையான பயங்கர அடக்கு முறைக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கும் தீர்வுவழி எமது நாட்டை ஆக்கிரமித்துள்ள சிறீலங்காவிடமிருந்தும் அதன் நிர்வாக இயந்திரங்களாக தமிழ் ஈழத்தில் நிலை கொண்டுள்ள முப்படைகள் காவல் துறை (பொலிஸ்) போன்றவற்றிடமிருந்தும் விடுதலை பெறுவதாகும்.

சிறீலங்கா பாராளுமன்றத்தில் சிறீலங்கா பிரதமரின் படைவீரர்களும் மனிதர்கள்தான் என்ற உரையையும் அமைச்சர் சிறில் மத்தியூவின் பயங்கரவாதத்திற்குப் பயங்கரவாதமே பதிலடி என்பதும் சிறீலங்காப் பாராளுமன்றப் பின்வரிசை உறுப்பினர்களின் காட்டுக் கூச்சலும் சிறீலங்கா பாராளுமன்றத்தில் தமிழ் பா உ. கள் நடாத்தப்படும் விதமும் தமிழீழ மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகளுக்குப் பச்சை விளக்குக் காட்டுவனவாம்.

சிறீலங்காவில் முதலாளித்துவ ஜே ஆர். அரசு தமிழ் ஈழத்தின் வடபகுதியில் தனது படைகளை நிறுவி நிலைப்படுத்தி வருகின்றது. மன்னார் வளன் நகர் அகதிகள் முகாமை அழித்து அகதிகளைக் கலைத்து பாரிய இராணுவ பயிற்சி முகாம் ஒன்றையும் வவுனியாவில் மிகப் பெரிய அளவிலான இராணுவ முகாம் ஒன்றையும் ஆகாயப்படை முகாமொன்றையும் பலாலி உள்ளூர் விமானசேவையை ரத்தாக்கி விட்டு அதில் புதிதாக படையினர்க்கு விமானத்தளம் ஒன்றை நிறுவவும உள்ளது. ஏற்கனவே விமானப் படைப்பாதுகாப்புப் பிரிவு ஒன்று பலாலியில் உள்ளது முல்லைத்தீவில் புதிதாக இராணுவமுகாம் ஒன்றையும் (இப்போது இரண்டு) நிறுவி ஆயுத தளபாடங்களைக் குவித்து நீண்ட காலத்தாக்குதலுக்குத் தன்னைத்தயார் செய்து வருகிறது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் திரு அமிர்தலிங்கம் அவர்கள் ஜே. ஆரின் முன் வேண்டி உறுதிபெற்றதின் பின்பு அதாவது தமிழீத்தில் பாதுகாப்புப் படைகளின் அடக்கு முறை நிறுத்தப்படும்; என்ற உறுதி மொழியின் பின்பு பலாலி இராணுவ முகாமிற்கு 200 வீரர்கள் கொண்ட அதிரடிப்படையைத் திடீர்த் தாக்கலுக்கும் கிராமிய முற்றுகைக்கு மாக அனுப்பப்பட்டமை ஆகும் (அதிரடிப் படைப்பிரிவில் கிராமிய முற்றுகைக்கும் திடீர்தாக்குதலுக்குமான பிரிவுகள் உண்டு) தமிழீழத்திலுள்ள சிறிய அளவில் பரவலாக அமைந்துள்ள சிறீலங்காவின் இராணுவமுகாம்களை மிகப் பெரிய அளவில் விஸ்தரித்து (உ-ம் பலாலி, மாதகல்,) வருகின்றனர்; மற்றும் சில கரையோரப்பகுதிகளில் ஆங்காங்கே புதிதாக சிறிய அளவிலான முகாம்களை நிறுவி வருகிறார்கள். ஏற்கனவே உள்ள காவற்துறை நிலையங்களை விஸ்தரித்தும் (உ-ம் காங்கேசன்துறை) மற்றும் தமிழீழப் பகுதியில் புதிய காவல் நிலையங்களை நிறுவியும் (உ-ம்: அச்சுவேலி) உடுப்பிட்டி, நிறுவப்படஉள்ளது) வருகின்றது. இத்துடன் அவையாத ஊர்காவற்றுறை, திருகோணமலை போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பகுதிகளில் கடற்படைகளை மிகப்பெரிய அளவில் விஸ்தரித்து நிலைப்படுத்தி வருகின்றது. வடஈழத்தவரின் கண்களைக் திறக்கின்ற விடயமாக அமைந்துள்ளது. என்ன வெனில் இராணுவ இணைப்பதிகாரியாக பிடிகேடியர் ரணதுங்கா நியமிக்கப்பட்டதாகும். சிறீலங்கா நடப்பாண்டுக்கான தனது வரவு செலவுத்திட்டத்தில் படைச் செலவினங்களுக்கு மிகப் பெரிய தொகையை சுமார் (71 கோடி) ஒதுக்கியுள்ளது

சுதந்திரம் என்பது பிச்சை அல்ல இரந்து பெறுவதற்கு. தமிழ் ஈழத்தின் விடுதலைக்குப் போராட வானத்தில் இருந்து எவரும் வரமாட்டார்கள். வானத்திலிருந்து தமிழீழம் வரவும் போவதில்லை. சிறீலங்கா பாராளுமன்றத்தில் மணிக்கணக்காக நாட்கணக்காக நடத்தப்படும் விரிவுரைகளும் கற்பனை வாதமும் வாய் விச்சும் மந்தைக்குணம் படைத்த மனிதர்களை ஒரு வழிப்பாதையிலே ஏமாற்றும் தந்திரமும் தமிழ் ஈழ மக்களை எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காது என்பதையும் சாத்வீகம் அடக்கு முறைக்குப் பதிலளிக்காது என்பதையும் தமிழ் மக்களை வழிநடத்திச் செல்வதாகச்சொல்லும் தலைவர்கள் உணர வேண்டும்,

ஏகாதிபத்தியங்களும் முதலாளித்துவங்களும் தம் கீழ் உள்ளனவற்றிற்கு நன்மையையோ சுதந்திரத்தையோ கொடுக்க மாட்டார்கள். மாறாக பிச்சையைத்தான் போடுவார்கள். வெளிநாட்டவர்களின் கண்களில் மண்ணைத்தூவி தமிழீழத்தை ஆக்கிரமித்துச் சுரண்டி வரும் சிறீலங்கா தானாகவே தமிழீழத்தை விட்டு அகலாது என்பதும் அதாவது சுரண்டலை கைவிடாது என்பதும் விஞ்ஞானரீதியான உண்மையாகும். சிறீலங்கா தமிழீழத்தின் மீது தமது சுரண்டலைப் பாதுகாக்கவும் ஆக்கிரமிப்பை வலுப்படுத்தவும் விடுதலையை முளையிலேயே கருக்கவும் பல பயங்கர நடவடிக்கைகளை மேற்கொள்ளும். எனவே இனவொடுக்கல் நடவடிக்கையான 1958, 1977 இல் இருந்தும் விடுதலையினதும் தியாகத்தினதும் விளைநிலங்களான லத்தின் அமெரிக்கா கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் நம் கண்களுக்கு முன்னாலேயே விடுதலை அடைந்த வியட்நாம், கம்போடியா அங்கோலா, மொசாம்பிக், வங்காளம், போன்ற விடுதலையடைந்த நாடுகளிலிருந்தும் விடுதலைக்குப் போராடும் ரொடிசியா, தென்னாபிரிக்கா, பாலஸ்தீனம், போன்றவற்றிலிருந்தும் இன்னும் தாயக விடுதலைக்காக உலகெங்கும் போராடிக் கொண்டிருப்பவர்களிடமிருந்தும் ஏன்? தனது நாட்டில் எழுந்த சமூக பொருளாதாரப் புரட்சியை அடக்கி பல்லாயிரக்கணக்கில் இளைஞர் யுவதிகளைக் கொன்று அவர்களை நிர்மூலமாக்கி முதலாளித்துவத்தைப் பாதுகாத்த சிறீலங்காவின் நடவடிக்கைகளிலிருந்தும் நாம் பல பாடங்களைப் படிக்கவேண்டும்,

எனவே நாம் வந்த பின் காப்போனாக செயல் படாமல் வருமுன் காப்போனாக செயல் படவேண்டும். வேற்று நாட்டவர்களோ, தங்களையே காப்பாற்ற முடியாத தமிழ்தலைவர்களோ எம்மை காப்பாற்றுவார்கள் என்பதும் மடைமையாகும், எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அழுதும் பிள்ளை பெறவேண்டும் என்பது போல தமிழ் ஈழம் முதலாளித்துவ சிறீலங்காவிடமிருந்து விடுதலை பெறுவதற்கு முன் விடுதலைக்கு முன்னோடியாக நாம் சில நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும். ★

## இதயம் கல்விப் பணியில் . . .

தமிழ் ஈழ ஏழை விஞ்ஞான மாணவர்களுக் கென நடாத்தப்பெற்ற எமது கல்விச்சேவையின் பத்தாத தொகுதிகளும் உரிய காலத்தில் மாணவர்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பரீட்சை முடிந்த உடன் பலர் இதயத்தின் ஆழத்திலிருந்து தம் நன்றியைக் கடிதங்களில் எழுதியுள்ளார்கள். இச் சேவையினைச் செய்து முடிப்பதற்கு எழுபதிற்கும் மேற்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் உதவி செய்துள்ளார்கள். யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என்போர் ஈடு செய்ய வேண்டிய தொகையில் ஏறக்குறைய ¼ பகுதியைத் தந்துதவினர். இத் தொகையில் (ரூ 11, 907.50) அரைவாசியைத்தானும் நாம் இன்னும் சேர்த்து முடிக்கவில்லை. நன் மனம் கொண்டோரின் உதவியை இன்னும் நாடி நிற்கிறோம்.

இன்றைய நடைமுறைக்கல்வி எத்தனை சமுதாய சிந்தனையுள்ள பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது என்ற கேள்வி இச்சேவையினை நடத்தும் போது எம்மிடையே எழுந்தது. சமுதாய விடுதலைக்குப் பங்களிப்புச் செய்யாத வெறும் புத்தகப் படிப்பினால் யாது பயன்? இன்றைய சமுதாய அமைப்பினை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தாத கல்வித்திட்டத்தினை முதலில் மாற்றி அமைக்க வேண்டாமா? இத்தகைய மறுசீராக்கவில் ஈடுபட்ட யாழ்வளாக கலைப்பீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பல்துறைக் கற்கைநெறியினை மாணவர்களிற்கு ஆரம்பித்துத் தொடர்ந்து கற்பித்து வருகிறார்கள். கருத்தரங்குகள் திரைப்படங்கள் மூலமாக சமகால ஆசிய அரசியல் சமூக பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றிய அறிவு மாணவர்களிற்கு வழங்கப்படுகிறது. இத்தகைய கல்வியினூற் கூடத் தம்மைச்சுற்றவுள்ள சமுதாயப் பிரச்சனைகளிற்கு எத்தனை மாணவர்கள் முகம் கொடுக்கிறார்கள்?

கலை மூலம் சமூகக் கல்விப்பணி புரிய யாழ் நகரில் அவைக்காற்றுக்கலைக்கழகம் நாடக அரங்கக்கல்லூரி என்பன முன்வந்துள்ளன அவைக்காற்றுக்கலைக்கழகம் நடனம் நாடகம் போன்ற ஐந்து கலைவடிவங்களைப் பல இடங்களிலும் மேடையேற்றி முதலாவது கட்டத்தைக் கடந்துள்ளது இரண்டாவது கூட்டத்திற்கு வந்துள்ள அவைக்காற்றுக் கலைக்கழகக் கலைப்பணி பாராட்டுக்குரியது.

நாடக அரங்கக் கல்லூரி இதுவரை மூன்று நாடங்களை இரசிகர் அவைக்காக மேடையேற்றியுள்ளது இன்னும் 6 நாடங்களை இவ்வருடத்துள் மேடையேற்றவுள்ளது இதன் பணி வரவேற்கத்தக்கது.

இவையிரண்டும் தமது கலைவடிவங்களைக் கிராமங்களிற்கும் வெளிப்படுத்தி சமுதாய விடுதலைக்கு உதவ வேண்டுமென்று வாழ்த்துகிறோம். ★

இப்பிரசுரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள திரு. அ. விமலதாசன் என்பவருக்காக யாழ்ப்பாணம் 102, பிரதான வீதியிலுள்ள சென். பிலோமினா அச்சகத்தில் அச்சிட்டு 10-5-79-ல் வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the G. P. O. Under no. Q. D. 8935/78.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org